# ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்

**ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை**

**ஆசிரியர் : பி. வீரராகவன்**

**வருட சந்தா ரூ. 3.** **தனிப் பிரதி 4 அணா**

மலர் 13 } டிசம்பர் 1952 { இதழ் 12


## ஏட்டுச்சுரைக்காய் பசிக்குதவுமா ?

"இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டம் முதலாளித்துவத்தை ஆதரிக்கக்கூடியதாகவே, அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடியதாகவே இருக்கின்றது."

"சாதாரண பாமர மக்களின் நலன் பற்றிய விவரங்கள் எதிலும் மேற்படி திட்டம் கவனம் செலுத்தவில்லை." எந்த வகையான சமுதாயம் ஏற்படுமென்பதையும் இத் திட்டம் வெளியாக்கவில்லை."

"இந்திய சர்க்காரும், நேரு சர்க்காரும் முதலாளியின் நலனுக்காகவே இருந்து வருகின்றது. பாமர மக்களையும், ஏழைகளையும் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் நடிப்பு. பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் பிரமாதமாக வெளிப்படுத்தி வரும் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டு திட்டமும் முதலாளிகளின் நலத்திற்கே."

(ஜே. சி. குமரப்பா.)

சமீபத்தில் மத்திய அரசாங்கத்தாரால் வெளியான ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி தன் உட்கருத்தை மேற்குறித்தவாறு தெரிவித்தவர் காந்தியாரின் சீடரும், காந்தீய பொருளாதார நிபுணருமான டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்களாவர். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ரூ. 2069 கோடி தேவைப் படுவதாக திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வரும் 5 ஆண்டுகளில் மாநில அரசுகள் 738 கோடி ரூபாய் மீதப்படுத்திக் கொடுக்குமென்றும், 520 கோடி ரூபாய்களை கடனுக பொது மக்களிடமிருந்து பெறுவதன் மூலம் இத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்றும் திட்டக் குழுவினர் நம்பியிருக்கின்றனர்.

மாநில அரசுகளும், மக்கள் கடனுகத்தரும் பணம் போக, மேலும் 655 கோடி ரூபாய், திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படுகிறது. இந்தத் தொகையை வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்க வேண்டும் அல்லது உள் நாட்டிலேயே வரி அதிகரித்து அல்லது மேற்கொண்டு பொது மக்களிடமிருந்து கடன் வாங்குவதுபோன்ற முறையை அனுஷ்டிக்கலாமென்று கமிஷன் சிபாரிசு சொல்லியிருக்கின்றது.

மேற்குறித்த வழிகளில் ஒவ்வொன்றையும் அனுபவத்தில் எவ்வளவு சாத்தியமென்று ஆராயவேண்டியது மிகமிக அவசியமாகும். "ஏட்டுச்சுரைக்காய் பசிக்குதவாது" என்ற பழமொழியின்படி திட்டம் காகிதத்தில் தீட்டப்பட்டிருக்கின்றதேயொழிய கையில் ஒரு காசும் இல்லாமல் கணக்குகள் மட்டும் பிரமாதமாக அச்சடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. உடனடியாக மக்களின் பொருளாதார நிலை உயர்த்தும் வகையில் அனுபவசாத்தியமான எத்தகைய திட்டங்களும் காணப்படவில்லை.

உதாரணமாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி அபிவிருத்திக்காக ரூ. சுமார் 155 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதில் 39 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் திட்டங்களுக்கு இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இராஜ்ய சர்க்காரின் கூட்டுறவுகளுடன் ஆதார சமூகக் கல்விக்கும், தொழில் நுட்ப கல்விக்கும் உபயோகப்படுத்தப்படுமாம். மிகுதியுள்ள 116 கோடி ரூபாய் மாகாண இராஜ்யங்களின் திட்டங்களுக்கு செலவிடப்படும். அதாவது வருடந்தோறும் சுமார் 26 கோடி ரூபாய் 9 ராஜ்யங்களுக்கும் செலவிடப்படும். அதன்படி சென்னை ராஜ்யத்திற்கு சற்றேறக்குறைய 3 கோடி ரூபாய் செலவிடப்படும். அந்த 3 கோடி ரூபாயும் ஆரம்பக்கல்வி, செகண்டரிகல்வி, தொழில்துறை கல்விக்குச் செலவிடப்படும். இந்த மூன்று பிரிவுகளுக்கும் சமமாக பங்கிட்டுக் கொடுக்

கப்பட்டால் சுமார் 1 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காக கிடைக்கும். இப்போது நமது மாகாணத்தில் 37,812 ஆரம்பப் பாடசாலைகளும், அதில் சுமார் 40 லட்சம் பிள்களும் படித்து வருகின்றார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 17 சத விகிதம் ஆரம்பப் பாடசாலைகள் அதிகப்படுமென்று சொல்லப்படுகின்றது. அதாவது சுமார் 6000 பாடசாலைகள் அதிகரிக்கப்படுமென்று சொல்லப்படுகின்றது. அதன் மூலம் இன்னும் சுமார் 60 ஆயிரம் பிள்ளைகள் அதிகமாகப் படிக்கலாம் — திட்டக் குழுவினர் கருத்தின்படி. நடை முறையில் இது எவ்வளவு தூரம் நடைபெறுமென்று ஆராய வேண்டிய விஷயம்.

திட்டக் கமிஷனின் கருத்துப்படி நடைபெறுவதாக ஒத்துக் கொண்டால், நமது மாகாணத்தில் 6 முதல் 11 வயது வரையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 80 லட்சம் பேர்கள் இருக்க, 40 லட்சத்து அறுபதினாயிரம் பிள்ளைகளை படிக்க வசதி ஏற்படுகின்றது. அப்படியானால் மீதமுள்ள 30,40000 பிள்ளைகளின் கதி என்ன ஆவது? பொதுவாக நாட்டின் கல்வியைப்பற்றி, குறிப்பாக ஆரம்பக் கல்வியைப்பற்றி அதிகமாக இந்தத் திட்டக் கமிஷன் சிந்தித்து இருப்பதாகத் தெரியவில்லை. குறைந்தது ரூ 5 கோடி வருடா வருடம் இத் திட்டக் கமிஷன் மாகாணவாரியாக, குறிப்பாக சென்னை மாகாணத்திற்கு ஒதுக்கினாலொழிய நமது மாகாணத்தில் மக்கள் கல்வி அபிவிருத்தியாகாது, பாமர நோய் ஒழியாது. இதைத் திட்டக் கமிஷன் யோசிக்குமா?

## சென்னை இராஜ்ஜிய எயிடட், எலிமெண்டரி பாடசாலை மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் நான்காவது மகாநாடு

சென்னை இராஜ்ஜியத்தில் 1950—ஆம் ஆண்டு கல்வியிலாகா வெளியிட்டுள்ள கணக்கின்படி, சுமார் 37,801 ஆரம்பப் பாடசாலைகள் இம் மாகாணத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் 18,416 ஆரம்பப் பாடசாலைகள் (Aided Sohools) உதவி பெறும் பாடசாலைகளாகும். அதில் சுமார் 8000 பாடசாலைகள் ஆசிரிய மானேஜர்களால் நடத்தப் படுபவைகளாகும். இதற்காக அரசாங்கத்தார் செலவிடும் தொகை சுமார் 5 கோடி ரூபாய்களாகும். சென்னை ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வியைப் பரப்பும் பொறுப்பு பெரும்பாலும் எயிடட், மானேஜ்மெண்டுகளிடையே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஸ்தாபனம், ஆட்சியாளர்களாலும், அதிகாரிகளாலும் புறக்கணிக்கப்பட்டு, ஏதோ இவர்கள் தங்கள் சுயநலத்திற்கு கூலிக்காக வேலை செய்வதாக கருதப்படுகிறதே யொழிய, நாட்டின் மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக உழைக்

கும் ஸ்தாபனம் என்று கருதப்படவில்லை. அதன் விளைவு சுயராஜ்யம் பெற்று ஆண்டுகள் 5 ஆயினும் ஆரம்பக் கல்வி நாட்டில் வளர்ச்சி அடையாமல் நாளுக்கு நாள் பாடசாலை மூடவேண்டிய சூழ் நிலை ஏற்பட்டு வருகின்றது. இந்த ஸ்தாபனங்களில் உழைக்கும் ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளமோ, மற்றச் சலுகைகளோ பலமுறை கேட்கப்பட்டும், ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை இறுதியாக ஆட்சிபீடத்திலுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டி நல்லதோர் முடிவை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு டிசம்பர் 29-ந் தேதி சென்னையில் மகா நாட்டைக் கூட்டுவதென முடிவு செய்திருந்தோம்.

ஆனால், அநேக தோழர்கள் கிருஸ்மஸ் பண்டிகையாக இருப்பதாலும், ஏகாதசி, பொங்கல் போன்ற பண்டிகைகள் வருவதாலும், இவைகளையெல்லாம் தள்ளி, ஜனவரி கடைசி வாரத்தில் வைக்க வேண்டுமென்றும் எழுதியுள்ளதின் பேரில் ஜனவரி மாதம் 25-ந் தேதி வைப்பதென மகா நாட்டின் குழுவினர் தீர்மானித்திருக்கின்றனர். இன்னும் சில தினங்களில் மகாநாட்டின் நிகழ்ச்சி நிரல் தயார் செய்து எல்லா சங்கங்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். இதற்குள் தாலுக்காவாரியாக எயிடட் பாடசாலை மானேஜர்கள் சங்கங்களைக்கூட்டி 2 பிரதிநிதிகளுக்குக் குறையாமல் தேர்ந்தெடுத்து, மகாநாட்டுக் குழுவினருக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு:

**பி. வீரராகவன்,**

தலைவர், மகாநாட்டுக்குழு.

'ஆரம்பக்கல்வி ஆபீஸ்' – 94-95, புதுத்தெரு, மண்ணடி மதராஸ்–1.

## N. G. O. பிள்ளைகளுக்கு சம்பள நஷ்ட ஈடு

ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் N. G. O. அரசாங்க ஊழியர்களின் பிள்ளைகளுக்கு சம்பள நஷ்ட ஈடு கொடுக்கும்படி சமீபத்தில் அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர். அதாவது அந்தந்த பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள சம்பள விகிதப்படி, வருடத்தில் எவ்வளவு நஷ்டமாகிறதோ அந்த முழுத் தொகையையும் (Deputy Inspector)ர்களுக்கு கணக்கு அனுப்பிவிட வேண்டும். அதில்பாதி பாகத்தை உடனடியாக எயிடட் பாடசாலை மானேஜர்களுக்குகொடுக்கும்படி அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

N. G. O. அரசாங்க ஊழியராயிருந்தாலும் அவருடைய சம்பளம் மாதம் ரூ. 300 மேல் இருக்குமானால், அவருடைய பிள்ளை

களுக்கு இந்தச் சலுகை கிடையாது என்று சமீபத்தில் அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர். சிற்சில ஜில்லாக்களில் N. G. O. பிள்ளைகள் சம்பள நஷ்டஈடு பெற்றுக் கொள்வதற்காக Deputy Inspector கள் மானேஜ் மெண்டுக்கு சுற்றறிக்கையும் அனுப்பிக் கொண்டு வருகின்றார்கள்.

"ஆதலால் ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் உடனடியாக தங்கள் பாடசாலைக்கு எவ்வளவு சம்பள நஷ்டஈடு N. G. O. பிள்ளைகளால் வருஷத்தில் ஏற்படுகிறதோ, அந்த முழுத் தொகையும் உடனடியாக Deputy Inspector களுக்கு எழுதி அனுப்பி அதில், பாதியை பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

**P. வீரராகவன்,**

பொதுக் காரியதரிசி.

சென்னை இராஜ்ய ஆரம்பப் பாடசாலை, மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ் சென்னை—1.

## அமெரிக்கா புதிய ஜனாதிபதி ஐசனோவர்

இவர் 1790-ம் ஆண்டு அக்டோபர் 14-ந் தேதி அமெரிக்காவில் டெக்ஸாஸ் என்ற மாகாணத்திலுள்ள டெனிசன் என்ற ஊரில் பிறந்தவர். தன் 19-ஆம் வயதில் அபிலின் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று தேர்ச்சி அடைந்தவர். இவர் 1911-ஆம் ஆண்டில் அமெரிக்கா ராணுவத்தில் சேர்ந்தார். சேர்ந்து 1915-ல் பெரிய ராணுவ உத்தியோகத்தில் அமர்ந்தார். 33 ஆண்டுகள் பற்பல பெரிய ராணுவ உத்தியோகங்கள் பதவியேற்று இரண்டாம் மகாயுத்தத்தில், ஆப்ரிக்கா, பிரான்ஸ் முதலிய போர் முனைகளில் ஈடுபட்டு அமெரிக்காவின் சார்பில் பற்பல வெற்றிகள் கண்டார். 1948-ல் ராணுவப் பதவியிலிருந்து ஓய்வு பெற்று கொலம்பியா பல்கலைக் கழகத்தின் தலைவராக அமர்ந்து கல்விப் பணியில் ஈடுபட்டார். 1952-ல் மே மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஸ்தானத்திற்கு போட்டியிட தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். இவர் ராணுவ அனுபவமுள்ள ஜனாதிபதியாவார்.

# கீழ்த்தர கெஜட் உத்தியோகஸ்தர்களுக்குக் கல்விச் சலுகை கிடையாது

கெஜட் பதவில்லாத சில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் மாதம் ரூ. 300 க்கு மேல் சம்பளம் வாங்கும் கீழ்த்தர கெஜட் உத்தியோகஸ்தர்களுக்கு (அவர்களின் குழந்தைகளுக்கு) கல்விச் சலுகை அளிக்க முடியாதென்றும், சர்க்காரின் பண நெருக்கடியே இதற்குக் காரணமென்றும், இன்று கௌன்ஸிலில் கல்வி மந்திரி அறிவித்தார்.

## கௌன்ஸிலுக்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதி

கௌன்ஸிலுக்கு ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சில சங்கங்கள் கவர்னரிடம் விண்ணாபித்துக் கொண்டனவென்றும், அவர்கள் சமர்ப்பித்த யோசனைகள் உபயோககரமானவை என்று கவர்னர் அறிந்துகொண்டாரென்றும், இச்சங்கங்கள் சமர்ப்பித்த (நபர்களடங்கிய) ஜாப்தாவைத் தயாரித்து இங்கு சமர்ப்பிப்பதால் பிரயோஜனமெதுவும் இராதென்றும், முதல் மந்திரி இன்று கௌன்ஸிலில் ஒரு கேள்விக்கு பதிலளித்தார். மேலும் சில கேள்விகளுக்கு பதிலளிக்கையில், இது கவர்னர் செய்யவேண்டிய விஷயமென்றும், அரசியல் சட்டத்தில் எவ்வளவு பேரை நியமிப்பதென்பது வரையறுக்கப்பட்டிருக்கிறதென்றும், இதில் தாம் எதுவும் சொல்வதற்கில்லையென்றும் முதல் மந்திரி கூறினார்.

## பள்ளிக்கூடங்கள் மூடப்படுமா ?

## ஆச்சாரியார் பேச்சின் எதிரொலி

நேற்று சட்டசபையில் நடமாடும் புத்தகசாலைகளைப் பற்றி சராமாரியான கேள்விகள் கிராமநல இலாகா மந்திரியைக் கேட்கப்பட்டன. அவ்வமயம் பிரதமர் ஆச்சாரியார் இடையிட்டு "புத்தக அறிவில் அதிக நம்பிக்கை வைக்கப்படுவதாக அறிகிறேன். இந்த நடமாடும் புத்தகசாலைகளில்லாமலேயே நாம் அபிவிருத்தியடையலாம் என்றார்.

பி. ராமமூர்த்தி :—இக்காரணத்தினால் பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடிவிடுவதை பிரதமர் ஆதரிக்கிறாரா ?

பிரதமர் :—பள்ளிக்கூடங்கள் புத்தகப் படிப்பைவிட வேறு அறிவை அதிகமாகப் புகட்ட வேண்டுமென்பது எனது கருத்து.

## தமிழ்நாடு ஆசிரியர் சம்மேளனம்

## பொதுக் காரியதரிசியின் அறிக்கை

பிரிட்டிஷ் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட G. O. 416 ஆரம்ப ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் அமைப்பதற்கு இடையூறாக இருந்ததைப் பற்றியும், அதை உடைத்தெறிவதற்கு சம்மேளனம் செய்த தீவிர முயற்சிகளைப் பற்றியும் அதன் பயனாக சென்னை உயர் நீதி மன்றத்தார் ஆரம்ப ஆசிரியர்களின் ஜீவாதார உரிமைகளுக்கு G. O. 416 எதிரானதென்றும், அவ்வாறு இருப்பது அரசியல் சட்டத்தின் விதிக்கு எதிரானதால் அது செல்லாது என்றும் தீர்ப்பளித்தார்கள். அதனால் அரசாங்கம் G. O. 416 ஐ வாபஸ் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பான ஒரு வாரத்திற்குள் மறுபடியும் 24–10–51 தேதிய G. O. 2777 ஐ கொண்டு வந்தார்கள். இந்த G. O. விற்கும் G. O 416 க்கும் அடிப்படையில் எந்த விதமான வித்தியாசமுமில்லாதிருந்ததால் இதையும் நாம் எதிர்த்தோம். கடைசியாக கல்வி இலாகா டைரெக்டர் அவர்களால் 10–10–52–ந் தேதிய ஆர். ஸி. 192 பி. 1 (2) 52 உத்தரவின்படி G. O. 2775 வாபஸ் பெறப்பட்டதாகவும் இனிமேல் ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் விருப்பப்படி சங்கம் அமைக்க பூரண உரிமை உடையவர்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு வெளியாகியுள்ள தானது நம் ஆசிரியர் இயக்கத்தின் மாபெரும் வெற்றியாகும். நம்மை இதுவரைப் பிரித்து வைத்த G. O. தோற்கடிக்கப்பட்ட இந்நேரத்தில் நாமும் நம்மிடையேயுள்ள நிர்வாகப் பிரிவினையை அகற்றி பிரதேச வாரியாக எல்லா நிர்வாகங்களிலுமுள்ள ஆசிரியர்களையும் கொண்ட தாலுக்கா, ஜில்லா சங்கங்களை மிக வெற்றிகரமாய் அமைக்க வேண்டுமென சங்க வேலையில் ஈடுபட்டுள்ள எல்லா ஆரம்ப ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 1953-ஆம் சர்க்கார் விடுமுறை தினங்கள்

1953-ம் வருஷத்திற்கு பின்வரும் தினங்கள் விடுமுறையாக விடப்பட்டிருப்பதாக சென்னை சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது :—

ஜனவரி மீ :—1உ-புது வருஷம்; 13உ–போகி; 14உ-பொங்கல்; 26உ-குடியரசு தினம்.

பிப்ரவரி மீ :—12உ-மகா சிவராத்திரி.

மார்ச் ௴ .—16உ-தெலுங்கு வருஷப் பிறப்பு (மலபார் ஜில்லாவுக்கு மட்டுமல்ல)

ஏப்ரல் ௴ :—3உ-குட் பிரைடே; 13உ-தமிழ் வருஷப் பிறப்பு.

ஜூன் ௴ :—30உ-பாங்கி அரை வருஷக் கணக்கு முடிப்பு (மற்ற சர்க்கார் ஆபீசுகளுக்கு விடுமுறையில்லை)

ஆகஸ்டு ௴ :—15உ-சுதந்திர தினம்; 21உ-பக்ரீட்; 24உ-ஆவணி அவிட்டம்;25உ-ஸ்ரீ நாராயண குரு தேவ் பிறந்த தினம் (மலபாருக்கு மட்டும்)31உ-ஸ்ரீஜெயந்தி.

செப்டம்பர் ௴ :—12உ-விநாயக சதுர்த்தி;

அக்டோபர் ௴ :—2உ-காந்தி ஜெயந்தி; 7உ-மஹாளய அமாவாசை 15, 16, 17 ஆயுத பூஜை.

நவம்பர் ௴ :—5, 6 தீபாவளி; 20உ-மீலாடி நபி.

டிசம்பர் ௴ : —16உ-வைகுண்ட ஏகாதசி; 25உ-கிறிஸ்துமஸ்; 31உ-பாங்கிகள் வருஷாந்திரக் கணக்கு முடிப்பு (மற்ற சர்க்கார் ஆபீசுகளுக்கு விடுமுறையில்லை.)

மற்றபடி ஞாயிற்றுக்கிழமைகளும் மூன்றும் சனிக்கிழமைகளும் (தீபாவளி மாதம் தவிர) விடுமுறைகள்.

## "ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி!"

## பெயர் முன் மரியாதைச் சொற்கள்

சர்க்கார் கடிதப் போக்குவரத்துகளில், விலாசதாரர்களின் பெயருக்கு முன்னால் மரியாதை அடையாளம் குறிப்பிடுவதில், மதம், ஜாதியாகிய வித்தியாசமெதுவுமின்றி ஆண்களுக்கு 'ஸ்ரீ' என்றும், விவாகமான பெண்களுக்கு 'ஸ்ரீமதி' என்றும், விவாகமாகாத பெண்களுக்கு 'குமாரி' என்றும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்திய பிரதம மந்திரியின் யோசனையின் பேரிலேயே இந்தத் தீர்மானம் செய்யப் பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட வார்த்தைகள், ஹிந்து முஸ்லிம், கிருஸ்துவர்களான எந்த மதத்தைச் சேர்ந்த இந்தியருக்கும் ஒரே வித மரியாதையையும், கவுரவத்தையுந் தான் கொடுக்கக்கூடியன. எனவே இனி எல்லோருக்கும், அவர்களுடைய பெயரின் மூலத்தையோ, அல்லது ஜாதி, மதங்களையோ கவனிக்காமல் மேலே கூறப்பட்ட மரியாதைச் சொற்களே வழங்கப் படும்.

# ஆரம்ப ஆசிரியருக்கு ரூ. 110 சம்பளம்

## கல்லூரி ஆசிரியருக்கும் பிரதம மந்திரிக்கும் ஒரே சம்பளம்

கோவை. நவ. 27.

நவ சீனாவில் புதிய அடிப்படைகளில் கல்வி போதிக்கப் படுவதாகவும் எழுத்தறிவிப்பு இயக்கமொன்று நடத்தப் படுவதாகவும் அதன் விளைவாக இரண்டாண்டு காலத்தில் அறியாமை அங்கே அறவே ஒழிக்கப்பட்டு விடுமென்றும் ஐந்தாண்டு காலத்தில் நாட்டிற்கு வேண்டிய டாக்டர்களும் என்ஜினீயர்களும் தயாராகி விடுவார்கள் என்றும் திருச்சூர், தாமஸ்கல்லூரிப் பேராசிரியரான ஜோசப் முண்டசேரி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

கோவை சமாதானப் பிரியர்களால் இக்கூட்டம் கூட்டப்பட்டது. இதில் சில பள்ளி ஆசிரியர்களும் பல மாணவர்களும் படித்த நடுத்தர வகுப்பினரும் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் பீகிங்கில் நடந்த ஆசிய சமாதான மகாநாட்டில் ஜோசப் முண்டசேரி கலந்து கொண்டனர்.

சீனாவில் தாம் நேரில் கண்டு அறிந்து வந்தவை பற்றிப் பேசுகையில் அவர் கீழ்வருமாறு கூறினார்.—

### கல்வியின் முன்னே

சீனாவில் கல்வித் துறையில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாண்டு காலத்தில் அறியாமையை அறவே ஒழித்து விட முடியுமென்று அவர்கள் கூறுகின்றனர். இதற்காக குறுகிய கால எழுத்தறிவிப்பு இயக்க மொன்றை சீனா நடத்தி வருகிறது. சீன பாஷை அலாதியான ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு வரிவடிவம் அப்பாஷையிலுண்டு. மொத்தம் 20 ஆயிரம் வார்த்தைகள் அம்மொழியில் இருக்கின்றன. சர்வ தேசப் புகழ் வாய்ந்த பெரிய ஆசிரியர்களுங் கூட சுமார் 2000 வார்த்தைகள்வரை தான் கற்றுள்ளனர். ஆறு மாத காலத்தில் 200 வார்த்தைகளை எழுத்தறிவற்றவர்களுக்குப் போதித்து ஓரளவு மொழித் திறமையை ஏற்படுத்துவதே குறுகிய கால எழுத்தறிவிப்பு இயக்கத்தின் குறிக்கோள்.

இதைக் கற்றுத்தர விசேஷ வசதிகளுடன் பள்ளிக்கூடங்கள் சீன மக்களுக்குத் தேவைப்படவில்லை. மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கேயே அவர்களுக்குப் பள்ளியும் ஏற்பட்டு விடுகிறது. ஓரளவு எழுத்துப் பயிற்சி யுள்ளவர்களே மற்றவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகிறார்கள்.

இதன் விளைவாகப் புதியதாக நூல்களைப் படிக்க வேண்டும் என்ற பேரார்வம் சீன மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. மூர் மார்க்கெட் அவ்வளவு பெரிய புத்தகாலய மொன்றில் மாலை நேரத்தில் ஏராளமானபேர் புதிய புத்தகங்களைத் தேடிக் குவிப்பதை நான் பார்த்தேன்.

இதற்குக் காரணம் எழுத்தறிவியக்கமும், அத்துடன் சீன மக்களின் பொருளாதார நிலையில் தேவைப் பொருள்களுக்குச் செலவிட்டதுபோக ஓரளவு டாம்பீகப் பொருள்களுக்கும் செலவிட்டபின் மீதப்படுவது ஆகும். அங்கே கதைப் புத்தகங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிப்பனவாக இருக்கின்றன.

## குழந்தைகளுக்குப் பள்ளிகள்

3, 4 வயதுள்ள குழந்தைகளுக்குத தனிப்பள்ளிகள் அங்கு இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையும் கட்டாயமாக ஒரு பள்ளியைத் தொழிலாளிகளின் குழந்தைகளின் உபயோகத்திற்காக நடத்த வேண்டும்.

ஆரம்பக் கல்வி, செகண்டரி கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றிற்காகப் பள்ளிகள் நடத்த அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கிறது. கல்வி இலவசமாகவே அளிக்கப்படுகிறது.

செகண்டரி. கல்வி அளிக்கும் பள்ளிகள் சுமார் 2000 பேர் படிக்க வசதியுள்ளனவாக இருக்கின்றன. அங்கேயே தங்கிப் படிப்பதற்கு அரசாங்கம் உற்சாகமளிக்கிறது. செகண்டரி பள்ளிகளில் என்ஜினீயரிங் படிப்பிற்கான ஆரம்பப் பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

என்ஜினியரிங் வைத்திய படிப்புகளை ஆர்வத்துடன் ஆண் பெண் இரு பாலரும் கற்கின்றனர். ஐந்து வருஷ காலத்திற்குள் சீன கிராமம் ஒவ்வொன்றுக்கும் ஒரு டாக்டரையும் சீனாவின் நிர்மாண வேலைகளுக்குத் தேவையான என்ஜினீயர்கள் அனைவரையும் சீனாவிலேயே தயாரித்து விடுவது அரசாங்கத்தின் குறிக்கோள்.

## இலவச உணவு

கல்விபெறும் மாணவர்களுக்குத் தேவையான உணவு இருப்பிட வசதிகள் யாவும் இலவசமாகவே தரப்படுகின்றன. ஓரளவுக்கு மேல் அதிகமாக ஊதியம் பெறுபவர்களுடைய குழந்தைகளிடமிருந்து மட்டும் சிறிதளவு (சுமார் 12 ரூபாய்கள்) மாத கட்டணம் பெறப்படுகிறது. இப்படிப் பணம் கட்டுபவர்கள் மொத்தமாகக் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கையில் சுமார் 20 சதவிகிதமேயிருக்கும்,

புதிய கல்வித் திட்டமே தேசபக்தி, நாட்டு மக்கள் மீது அன்பு தொழிலின் கவுரவம், விஞ்ஞானத்தின் மேன்மை, பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது என்ற ஐந்து அடிப்படைகளின் மீது நிறுவப்பட்டுள்ளது.

ஒரு புதிய மனப்பான்மையே சீனத்தில் வளர்கிறது. சீனாவில் ஆண் பெண் இரு பாலரும் ஒன்றாகச் சேர்ந்தே கல்வி கற்கின்றனர். ஆனால் இருபாலாரும் ஆக்கப் பூர்வமாக தேசத்திற்குச் சேவை செய்வது என்ற புதிய மனப்போக்குடன் கல்வி பெறுவதால் அங்கே தவறான ஒழுக்க உணர்வுக்கு இடமேற்படவில்லை.

## தாய்மொழியில் கல்வி போதனை

பள்ளிகளில் பரீட்சைகள் இல்லை. அவ்வப்போது ஆசிரியர்கள் மாணவர்களின் திறமையை மதிப்பிட்டு கணிக்கின்றனர். எல்லாப்பாடங்களும் தாய்மொழியிலேயே போதிகப்படுகின்றன. சமஸ்கிருதம் உட்பட முக்கிய பல அன்னிய மொழி போதனைகளும் பல்கலைக் கழகத்தில் போதிக்கப்படுகின்றன.

**ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு சுமார் 110 ரூபாய் ஊதியம் கிடைக்கிறது. இது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளத் தேவையான அளவுக்கும் சிறிது அதிகம். செகண்டரி பள்ளிகளின் ஆசிரியர்கள் சுமார் 200 ரூபாய்க்கு மேல் பெறுகிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் 400 ரூபாய் மாதம் பெறுகிறார்கள். சீனப் பிரதமமந்திரிக்கும் அதே சம்பளம் தான் தரப்படுகிறது. சீனக் குடியரசுத் தலைவர் மாதம் 600 ரூபாய் பெறுகிறார். பல்கலைக் கழகத் தலைவர்களுக்கு அந்தச் சம்பளம் தரப்படுகிறது.**

தொழில் வர்த்தகம் பற்றிப் பேசுகையில் சீனாவிலும் விற்பனை வரியும், வருமான வரியும் இருக்கிறதென்றும், விற்பனை வரியிலிருந்து உணவு முதலிய அத்தியாவசியப் பொருள்களுக்கு விலக்கு இருக்கிறதென்றும் முண்டசேரி கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:

சீனாவின் தொழிலில் சுமார் 70 சதவிகிதம் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகிறது. ஆனால் அவர்களுடைய லாபம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகச்சேரும் பணத்தை அவர்கள் தங்கமாகவோ விவசாய நிலமாகவோ வாங்கிச்சேகரிக்க முடியாது. வட்டிக்குப் பாங்குகளில் சேகரித்து வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட அளவு தொகை சேர்ந்த பிறகு அரசாங்க உதவியுடன் அதை வேறு தொழில்களில் ஈடுபடுத்தலாம்.

## "கூட்டுறவு இயக்கம்"

தேசிய வாழ்வில் கூட்டுறவு இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலான கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அவைகளைக் கிராமக் கமிட்டிகளே நிர்வகிக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் தேவைப் பொருள் வாங்குவதும் நடக்கின்றன.

## பத்திரிகைகள்

பத்திரிகைகள் சுயேச்சையாக இயங்குகின்றன. அரசாங்கத்

திட்டங்கள் அமுல் நடத்தப்படு வதை ஆக்க பூர்வமாக அவைகள் கண்டித்து எழுதுகின்றன. பத்தி ரிகைகளில் அரசாங்க திட்டத் தைப் பற்றி விமர்சனம், கூலி மக்கள் எழுதும் கடிதங்கள், கையெழுத்துக்களுடன் பக்கம் பக்கமாகப் பிரசுரிக்கப்படுகின் றன.

ஒவ்வொரு புதிய திட்டமும் அரசாங்கத்தால் முடிவு செய்யப் படுவதற்கு முன் பொது மக்க ளின் அபிப்பிராயத்திற்காகப் பிர சுரிக்கப்படுகின்றன. தீர்க்கமான விவாதத்திற்குப் பிறகு ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்களைக் கண்டிப்பதற்கு மட்டும் பத்திரி கைகள் அனுமதிக்கப்படுவதில்லை.

பத்திரிகைகளில் கூறப்படும் குறைகளும், கண்டனங்களும் அரசாங்கத்தால் அவ்வப்போது கவனித்துக் குறைகள் நீக்கப்படு கின்றன.

## அரசியல்

சீனாவில் எல்லா அரசியல் ஸ்தாபனங்களையும், மக்களுடன் தொடர்பு கொண்டு விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்ட ஸ்தாபனங்களையும் கொண்ட கூட்டணி அரசாங்கம் அங்கே நடக்கிறது. கட்சிகளுக்குள் பூசல்கள் நிலவுவதில்லை. ஒவ் வொரு கட்சியும், ஒவ்வொரு குறிப்பிட்ட தேசீய நிர்மாண இயக்கத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றன. படிப்படியாகக் கிராமத்திலிருந்து மத்திய சபை வரையிலும் அரசாங்கம் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளைக் கொண்டு நடத்தப்படுகிறது.

சீனாவில் நியாயமான மத சுதந் தரம் நிலவுகிறது என்று அவர் பேசினார். கிறிஸ்தவ மதத் தினர் கொடுமைப் படுத்தப் படு கின்றனர் என்ற வதந்தி உண் மையற்றது என்று அவர் சொன் னார்.

அவர் மேலும் கூறியதாவது: சீனாவில் பவுத்தர்களோ முஸ் லீம்களோ ஒடுக்கப்படுவதாகக் கூக்குரல் எழுப்பப்படுவதில்லை. உண்மை என்ன என்றால், கிறிஸ் தவ மதத்தைச் சேர்ந்த வெளி நாட்டினர் சிலர் சீனாவின் நல னுக்கு விரோதமாக நடக்கும் போது அவர்கள் தண்டிக்கப்படு கின்றனர் என்பதே. நான் ஒரு ரோமன் கத்தோலிக்க கிறிஸ்து தவர். சீனாவில் கத்தோலிக்க மதத்திற்கு உரிமைகளிருப்பதை நான் நேரிலேயே கண்டேன்.

# இது என் எண்ணம்

(எஸ். பங்கிராஸ் பாண்டியன், ஏ. எஸ். பி. உயர்தர ஆரம்பப் பாடசாலை, கருவேலம்பாடு, திருநெல்வேலி.)

"கலை கல்லான் கற்பிளவுறு கடற்கரை மணலாவான்." என்று கழறுகிறது கலை. கலையினால் தான் தொழில் தோன்றுகிறது. தொழிலால்தான் காடெல்லாம் களஞ்சியமாகிறது. மக்களெல்லாம் மனிதர் என்று மார்தட்டும் மறம் பெறுகிறார்கள். "நாடு, நால் திசையின் நமது நாடே" என்று நல்லிசையில் நாவலர் நவில்கின்றார்கள். இதனால் தொழில் அபிவிருத்தியில்லாமல் எந்நாடும் நலம் பெற முடியாது. இதற்கு அஸ்திவாரம் கலை. நமது நாட்டில் கலை வளர்த்த கலைஞர்கள் எத்தனையோ பேர் தோன்றி நம் பாரதத்தாயை அகிலம்போற்றும்படி செய்திருக்கிறார்கள்.

இந்த 20-ம் நூற்றாண்டிலே நமது நாட்டு அன்னை வ. உ. சிதம்பரம் பிள்ளை, அமரகவி சுப்பிரமணிய பாரதி, உ. வே. சுவாமிநாதய்யர், திரு-வேங்கடசாமிநாட்டார், சர். ஸி. வி. ராமன், கணித இராமானுஜம், திரு. ஜி. டி. நாயுடு, வள்ளல் அழகப்பன், அறிஞர் அண்ணா முதலியவர்களை நம் நாட்டிற்கு நல்கியிருக்கிறாள். இவர்கள் யாவரும் கலைவாணியின் அருளால்தான் நற்புகழ் எய்துகிறார்கள். கலையைப் பல உருவாக்கிக் களிமண் போன்ற மூளையில் கலந்து நாட்டையே தாங்கும் நற்றூண்களாகிய மாபெருந் தலைவர்களைத் தருவது ஆசிரியர்களே! ஆகையால் ஆசிரியர்களே நாட்டில் தோன்றும் எத்தகைய தொழிலுக்கும் ஆதிகாரணமாவார்கள். ஆசிரியன் எனப் பெயர் பெற்றவனே மூவுலகிலும் புகழடைந்தவனாவான். இத்தகைய பெருமை வாய்ந்த ஆசான் மன்றத்திற்கு இயற்றியுள்ள பொருத்தமற்ற சட்டங்களிலொன்றை ஈண்டு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

ஏட்டுக் கல்வியைவிட அனுபவக்கல்வியே சிறந்தது என்று பல அறிஞர்கள் ஆராய்ந்துரைக்க அதை மக்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மனிதன், தான் செய்யும் தொழிலில் அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க அறிவிலும், ஆற்றலிலும், வளர்ச்சி பெறுகிறான் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் பொதுவிதி. அதுபோல பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு ஆண்டு முடிய முடிய அனுபவம் அதிகரிக்கிறது. ஆகவே, அனுபவத்திற்குத் தகுந்தாற்போல் ஆசிரியரது போதனா திறனும், போதனா பலாபலனும் விருத்தியாகுமென்பது சொல்லாமலே தெரிகிறது. மேலே சொன்ன அனுபவமிக்க ஆசான்

கள் தங்களது அனுபவமுறையில் எதிர்காலச்சிற்பிகளாகிய இளைஞர்களுக்கு, வருங்கால மந்திரி, தந்திரி, இராஜதந்திர நிபுணர்களாகக் கூடிய பாலர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்க முடியாமல் முட்டுக் கட்டையிட்டு வைத்திருக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள்.

60 வயது பூர்த்தியான ஆசிரியர்கள் போதனை செய்ய சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். இன்றைய கண்காணிப்பாளர்கள். ஹயர்கிரேடு ஆசிரியர்கள் எஸ். எஸ். எல். ஸி எழுதி செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாறிக் கொள்ளலாம் என்பது நமது கல்வி இலாக்காவிலுள்ள தற்போதைய ஓர் சட்டம். இச் சட்டப் பிரகாரம் சோதனைகளில் வெற்றி பெற்று செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களாகவும், பட்டதாரிகளாகவும் மாறுபவர்களில் அதிகப்பட்டபேர் 40 வயதுக்கு மேல் 50, 55 வயதுக்குட்பட்டவர்களே! இன்னும், போதனை செய்ய சக்தி அற்றவர்கள் என்று அரசாங்கத்தாரால் கருதப்பட்டு ஓய்வு எடுத்துள்ள ஆசிரியர்களில் பலர் புத்தி நுட்பமான தொழிலாகிய வியாபாரம், நாட்டு வைத்தியம் முதலிய துறைகளிலும், கடினமிக்க சரீர சம்பந்தமான தொழிலாகிய வேளாண்மை போன்ற தொழில் செய்தும் வெற்றிகரமாய் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அதோடு கற்ற ஏழையைவிட, கல்லாத கைப் பொருள் உடையவனையே உலக மக்கள் மதிக்கின்றனர் என்பதை உணர்ந்து ஓய்வு எடுத்துள்ள ஆசிரியர்கள் கடல் கடந்தாகிலும் செல்வத்தைத் தேடிக்கொள்ளப் பிரயாசை எடுக்கிறார்கள். இத்துணை கஷ்டமான (அறிவு, சரீர சம்பந்தமான) தொழிலைச் செய்யும் 60 வயது கடந்த ஆசிரியர்களுக்கு போதனை செய்ய எப்படிச் சக்தி இல்லாமல் போகும் என்பது தெரியவில்லை. ஆசிரியர்கள் ப்ராவிடன்ட் பண்டில் சேர்ந்த சுமார் 30 வருடத்துக்குள் (அவருக்கு 60 வயது பூர்த்தியாகி விடுமாதலால்) ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியதாகி விடுகிறது. ப்ராவிடன்பண்டு என்ற முறையில் பிரதி மாதமும் மீதப் படுத்தும் தொகையோ மிகவும் சொற்பம். ஓய்வு எடுத்துள்ள ஆசிரியர்கள் இந்தத் தொகையை அவசியத்துக்கு அடைந்து கொள்ள, படும் பாட்டை சிந்தித்தால் "காப்பது உழவுக்குப்பால். உதைப்பது பல்லுப்போக" என்ற பழமொழிதான் ஞாபகம் வரும். இந்தச் சொற்ப தொகையை வைத்து எஞ்சிய வருடமாகிய சுமார் 40 வருடம் வரை தங்களது சவரக்ஷணையைச் செய்துகொள்ள முடியுமா?

தற்போது முதன் மந்திரியாய் இருக்கும் கனம் ராஜகோபாலாச்சாரியருக்கு வயது என்னவென்று கேட்டால் 73 என்று பதில் வரும் என்பது நம் எல்லோரும் அறிந்த விஷயமே. 73

வய்து கடந்த முதியோர் பாராள சக்தி இருக்கிறதாம். ஆனால் 60 வயது கடந்த ஆசிரியர்கள் அனேவரும் பள்ளிப் பாலர்களை நிர்ணயிக்க சக்திஇல்லையாம்.இதைச் சிந்திக்கும்போது வேடிக்கையாயிருக்கிறது. "ஆடத்தெரியாமாது தெருக்கோணல்" என்று சொன்னதுபோல் இருக்கிறது; சர்க்கார்ஆசிரியர்களுக்குச் சொல்லும் சாக்கு போக்கு.

ஓய்வு எடுத்துள்ள ஆசிரியர்களுக்கு பென்ஷன் என்ற முறையிலோ அல்லது பிராவிடன் பண்டுக்குச் சர்க்கார் கொடுக்கும் தொகையை இன்னும் சற்று அதிகரித்து வந்தால் 60 வயதல்ல 50 வயதில் வேண்டுமானாலும் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். இதனால் ஒரு பாதகமும் ஏற்படாது.

பொருளாதார முறையிலும், சமூகப் பண்பாட்டிலும் ஒரு நாடு சிறப்புற்று இயங்க அனுபவக் கல்வியே ஒருவனுடைய மனேசக்திகளை விருத்தி செய்து பண்புகளைச் சீர்படுத்துகிறது. மக்களை புகழ் வாய்ந்த அறிவாளிகளாக்கி நாட்டில் அவர்கள் முதலிடம் பெற முன்னுக்குக் கொண்டு செல்பவர் ஆசிரியரே. புகழ் வாய்ந்த அறிவாளிகளை இடையறாது அனுப்பிவைக்கும் ஏணியைப் போன்றவர் ஆசிரியரே ஒரு நாட்டின் சமுதாயத்தில் பல அறிஞர்களைத் தோற்றுவித்து இன்பமடையச் செய்கிறவர்கள் ஆசிரியர்களே! ஆகவே ஆசிரியர்களை ஆதரிக்க வேண்டுமென்பதைச் சர்க்கார் உணர்ந்து, ஆசிரியர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வென்று நிர்ணயித்துள்ள 60 வயதை உடனடியாக மாற்றி 70 அல்லது 65 வயதாக அமைத்தால் நாடு நலம் பெறுவது திண்ணம். இதுவே என் எண்ணம்.

---


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி., சென்னை, 1.**

| | | | |
|---|---|---|---|
| மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் | (ஆங்கிலம்) 100 | ரூ | 2–8 |
| ரிகார்ட் ஷீட்டுகள் | (ஆங்கிலம்) 100 | ரூ. | 2–0 |
| பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் | (ஆங்கிலம்) 100 | ரூ. | 2–0 |
| பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் | (ஆங்கிலம்) 100 | ரூ. | 1–0 |
| வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் | (ஆங்கிலம்) 100 | ரூ. | 2–0 |

(தபால் செலவு உட்பட)
ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்
முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# 2-வது உலகயுத்தத்தால் விளைந்த பரிசேதம் எவ்வளவு?

(கேர்ரா)

**யுத்தகளத்திலே இறந்தவர்கள்** 2 கோடி வாலிபர்கள். அதாவது பம்பாய், மத்திய பிரதேஷ், பீஹார் ராஜ்யங்கள் முழுவதிலுள்ள இளைஞர்கள் தொகைக்கு ஒப்பாகும். அதாவது அவற்றில் 40 சதவிகித ஜனத் தொகைக்கு சமமாகும்.

### விமான படையெடுப்பால் இறந்தவர்கள் :

$1\frac{1}{2}$ கோடி பெண்கள், குழந்தைகள், வயோதிகர்களாகும். அதாவது ஒரிசாவிலுள்ள ஜனத் தொகை அளவு.

**காயம்பட்டு, அங்கம் குலைந்து, உழைக்கத் தகுதியற்றுப் போனவர்கள்.** ஐதராபாத் ராஜ்யத்து ஜனத்தொகைபோல் 3 மடங்கு இருக்கும்; அதாவது 3 கோடி பேர், விமானப் படையெடுப்பால்வீடிழந்தவர்கள் $2\frac{1}{2}$ கோடிப் பேர். அதாவது மேற்கு வங்க ஜனத்தொகை யளவினர். அகதிகளானவர்கள், நாட்டை விட்டு வெளியேறியவர்கள், காவலில் வைக்கப்பட்டவர்கள் தொகை 5 கோடி. அதாவது சென்னை ராஜ்யத்திலுள்ள மொத்த ஜனத் தொகையாம்.

தரை மட்டமாக்கப்பட்ட வீடுகள்—3 கோடி. அதாவது பாக்கிஸ்தானிலுள்ள மொத்த வீடுகள் அளவு. தங்க நிழலின்றி, பஞ்சத்துக்கும், நோய்களுக்கும் ஆளானவர்கள் தொகை 15 கோடி. அதாவது 1944 வங்கப் பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல 40 மடங்கு பேராகும்.

### செலவு

அதனால் ஏற்பட்ட செலவு—, இந்திய சர்க்காரின் வருட வருமானத்தை $1\frac{1}{2}$ நாட்களில் செலவழித்து, அதுபோல் 5 வருடங்களில் செலவழிக்கப்படும் தொகைதான் யுத்தச் செலவு.

### இதனால் என்னென்ன செய்திருக்கலாம் ?

யுத்தத்தில் செலவழிந்த பணத்தைக் கொண்டு உலகிலுள்ள 230 கோடி மக்களுக்கும், ஒவ்வொரு ஆண், பெண், பெரியவர், குழந்தை உள்பட தலைக்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கலாம்.

அதாவது உலக முழுவதுமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணவன், மனைவி, இரு குழந்தைகள் கொண்ட குடும்பத்திற்கு 40 ஆயிரம் ரூபாயில் ஒரு வீடு, 20 ஆயிரம் ரூபாயில் ஒரு கார், நிலம் அல்லது வியாபாரத்தில் 50 ஆயிரம் ரூபாய் முதல், பாங்கியில் 30 ஆயிரம் ரூபாய் கணக்கு ஆகியவை கொடுக்கலாம். இத்துடன், தாமோதர், கோஷி, ராமநாதசாகர் நதி அணை

(17-ம் பக்கம் பார்க்க)

# "ஈ. வெ. ரா.வும் நானும் நினைப்பது ஒன்றே"

## ராஜகோபாலாச்சாரியார் பிரசங்கம்

கடலூரில் நடந்த நகர அரசியல் மகா நாட்டில் பேசுகையில் ராஜகோபாலாச்சாரி, திராவிட கழகத்தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரைப் பற்றிக் குறிப்பிட்டார்.

ஈ. வெ. ராவும் நானும் எப்பொழுதும் நெருங்கிய நண்பர்கள். ஜாதி அபிமானம் கூடாது என்று அவர் சொல்வதையே நானும் கூறுகிறேன். இது விஷயத்தில் எனக்கும், அவருக்கும் எவ்வித கருத்து வித்தியாசமும் கிடையாது. வடநாடு, தென்னாடு பிரிவினை என்ற எண்ணம் நம் நாட்டு மக்களிடமிருந்து ஒழிந்து விட்டால் போதும். நமது மாகாணம் மோட்சலோகமாகி விடும்.

ஜாதி வேற்றுமை ஒழிந்தால் தான் நம்நாட்டில் உள்ள எல்லாக் குறைகளும் ஒழியும்.

வெகு தினங்களுக்கு முன்பு நான் ஒரு விஷயம் சொன்னேன். அதாவது கொள்வினை-கொடுப்பனை மூலம் தான் ஜாதி வேற்றுமையும், எண்ணமும் ஒழிய முடியும் என்று கூறியுள்ளேன். அதைச்சில தினங்களுக்கு முன்பு ஈ. வெ ராவின் பத்திரிகை ஞாபகப்படுத்தி எழுதியிருந்தது. அது சரியே, ஜாதிவெறி என்பது மக்களின் ரத்தத்தில் உள்ள விஷம். அது முற்றிலும் தொலைய வேண்டும்.

இப்படித் திராவிட கட்சியை ஆதரித்து நான் பேசுவது குறித்து என் மீது பலர் பலவிதமாகப் பேசலாம். "காங்கிரஸில் இருந்துகொண்டே இவ்விதம் பேசுவது சரியா? இதற்குப் பதிலாக திராவிட கழகத்திலேயே சேர்ந்துவிடக் கூடாதா" என்று கூடக்கேட்பார்கள். அதைப் பற்றி கவலையில்லை. குடுமியைக் கத்தரித்து விடுவதாலும், பூணூலைக் கழற்றி எறிந்து விடுவதாலும், நாமத்தையும், விபூதியையும் அழித்து விடுவதாலும் ஜாதிவேற்றுமை நீங்கிவிடாது. முகத்தைக் கண்டு ஜாதி கண்டு பிடிக்கும் நிலைமை ஒழிய வேண்டும். மக்களின் மனத்திலிருந்து அந்த கெட்ட எண்ணம் நீங்க வேண்டும்.

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கட்டுத் திட்டங்கள் ஆயிரம் கட்டி, அந்த ஒவ்வொரு திட்டத்தின் மூலம் 25 லட்சம் ஏக்கரை நீர்ப்பாசனத்தின் கீழ்க்கொண்டு வந்து, 20 லட்சம் கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்து, இந்தியாவின் நீளத்தைப் போல் 40 மடங்குக்கு ரயில்வே தண்டவாளம் போட்டு, இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளியும், ஒரு ஆஸ்பத்திரியும் கட்ட முடிந்திருக்கும்.

(பிளிட்ஸ்)

# "பேச்சாளி"

K. R. S. மணியம். உதவியாசிரியர். இந்து நாடார் ஆரம்ப
பாடசாலை செட்டிகுறிச்சி

ஏற்பாடுகள் எல்லாம் வெகு பிரமாதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. எங்கள் வட்டார ஆரம்ப ஆசிரியர்கள் சங்க வருட நிறைவு விழாவும் அதையொட்டிய மாணவ மாணவிகளுடைய கலா நிகழ்ச்சிகளும் நடைபெறுவதாய் இருந்தது. ஆசிரியர்கள் சங்க ஆதீனத்திற்குட்பட்ட பள்ளிகளில் ஒரு சில ஆசிரியர்களை தனித்தனியாக ஏதாவது ஒரு பொருளைப்பற்றி பேசவும் பணித்திருந்தனர்.

விழாவிற்கு ஜில்லா கல்வி அதிகாரி... வட்டார, தலைமை உதவி கண்காணிப்பாளர்களையும் வரவழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டு அங்கத்தினர்களின் கரகோஷத்திற்கிடையே ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது,

விழா நடைபெற வேண்டிய தேதியும் நெருங்கிக் கொண்டிருந்தது....

நான் ஒரு வாயாடி. வழவழாவென்று . வார்த்தையாடுபவன் யாரிடமும் கல்மிஷமில்லாமல் பழகுவதற்குச் இந்தசாளப்பேச்சு மிகவும் உதவியாயிருந்தது. சில வேளைகளில், எனக்குள்ளே இருந்து என் உப்பைத் தின்று உயிர்வளர்க்கும் இந்த நாக்கு என்னையும் சில வேளைகளில் காட்டிக் கொடுத்துவிடும். இதன் காரணமாக நானே சில சமயங்களில் ஆசிரிய அன்பர்களின் மத்தியில் அகப்பட்டு, திண்டாடி படாதபாடுபட்டு... அவர்களின் உற்சாகம் அளவுக்கு மீறி அன்புச் சின்னங்களாக.... ஊமைக்காயம் ஏற்படாத வகையில் "அன்பு உதைகள்" கிடைக்கும்.

"நாக்கு மூன்று அங்குலந்தான் உள்ளது. ஆனால், அது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொன்று விடுகிறது.'' என்பதும் "நரிக்கு வாலைப்போல பெண்ணுக்கு நாக்குதான் முக்கிய அவயவம்''.... என்ற முந்திய ஜப்பானியப் பழமொழிகள் என் நினைவிற்கு வந்து மறைந்தன.

இதன் காரணமாக... அளவிற்கு மீறிய அன்பு காரணமாக சங்கக் காரியதரிசியிடம் பிரபல பேச்சாளர்கள் வரிசையிலே என்னுடைய பெயரையும் சேர்த்து விட்டார்கள். நான் வாயாடி....! வம்புக்காரன் என்பதற்காக... அதன் பிரகாரம் "நிகழ்ச்சி நிரலில்" கண்டபடி அடியேன் பேச வேண்டிய விஷயம் அ அ. ஆ.ஆ. என்பது கட்டுக்... கட..., கட்டு...

என்னுடைய இரகசியமான "கோடு வேர்ட்ஸ்"

உங்களுக்கு விளங்கவில்லையா?

புதிதாக அமெரிக்கா கண்டத்தைக்கண்டு பிடித்த பெருமை கொலம்பஸைச் சாரும்பொழுது.

நன்னம்பிக்கை முனையைக் கண்டு பிடித்த பெருமை.

இந்தியாவைக் கண்டு பிடித்த பெருமை வாஸ்கோடிகாமாவைச் சேரும்பொழுது... ஆஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டு பிடித்தேன் என்று ஒரு கப்பலின் காப்டனை 'குக்' மார்தட்டிக் கொள்ளும்போது...

ஆரம்பப் பள்ளி ஆசிரியனாகிய அடியேன் புதியதொரு வார்த்தையைக் கண்டு பிடித்தேனென்று பெருமைப் பட்டுக் கொண்டால் அது என்போன்ற உங்களையும் சாருமல்லவா...?

ஆனால், சுயநலம் பாராட்டி "பேடன்ட் ரைட்" ரிஜிஸ்டர் செய்யவில்லை. அவ்வளவு பரந்த மனப்பான்மை போங்கள்! உங்களது சகோதரனாகிய எனக்கு!!

அமெரிக்காவும் பிரிட்டனும் போட்டி போட்டுக்கொண்டு அணு குண்டு ரகஸியத்தைச் சொல்ல மாட்டேன் என்று மறுக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே நான் துணிந்து சொல்லுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம், வயிற்றுக்குப் போதிய உணவு தர வருவாயை... வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசியலார் வழி செய்யாத பொழுது சிறிது செவிக்காவது விருந்து தருகிறோம்.

நிதி மிகுந்தவர் வாங்கிப் படியுங்கள்...!

நிதி குறைந்தவர் செவிகள் கொடுப்பீர்...!!

அதுவுமில்லாதவர் அமைதியுடனிருப்பீர்...!!!

நிகழ்ச்சி நிரலில் கண்டபடி அடியேன் பேசவேண்டிய விஷயம் அ. அ. ஆ. ஆ. அதாவது "அண்ணலின் அடிச்சுவட்டில் ஆரம்ப ஆசிரியர்கள்." நானோ சிறியவன். கொடுக்கப்பட்டிருக்கும் விஷயமோ பெரிது.

பிரசங்கிக்கும்பொழுது இடையிலே பெருமைக்காவது சோடாவோ, கலரோ குடிக்காமல் பேசும் அரசியல் பிரசங்கி...

சேவை ஒன்றினையே குறிக்கோளாகக்கொண்டு தண்ணீர் கூட அருந்தாமல் கர்ஜிக்கும் சமூக சீர்திருத்தவாதி...

தொழிலாளர் நலனே தன் நலன் என உழைத்து, தன் வர்க்கத்தின் காசு ஒன்றைக்கூட காரியமில்லாமல் செலவழிக்க மனமிசையாது. அவர்களின் நலனுக்காக முதலாளி வர்க்கத்தினரிடம் உரிமைக்காக போராடி, போராட்ட ஆதரவுக் கூட்டத்திலே தண்ணீர் மட்டும் அருந்தி அண்டம் வெடிபட, அனல் தெறிக்க கர்ஜிக்கும் தொழிற் சங்கத் தலைவர்...

ஆஸ்திகர்களின் பழங்கோட்டை ஆட்டம் கண்டு தகர்ந்து விடும்படியான நிலைக்கு ஊரில் பகுத்தறிவு வளர்ச்சி. "தணிக்கை செய்யப்பட்டு சர்க்காரால் தடை செய்யப்பட்டு பின் வெளியிடப்பட்டுள்ள சினிமா படத்தின் அபரிமிதமான வசூல் போல"... பெருகிக் கொண்டு வருகின்ற நேரத்திலே ஆஸ்திக அன்பர்கள் அபாயக்குரல் கேட்டு அபயம் அளிக்க ஆங்காங்குள்ள "நெறிக் கழகங்கள்" "மடங்கள்" இவற்றின் அரவணைப்பிலே, கோட்டை ஆட்டம் காணாதபடி நிறுத்த புராணத்தின் புனிதம்... மதத்தின் மாண்பு பற்றி காய்ச்சிய பசும்பாலிலே தங்க பஸ்பம் சேர்த்து உள்ளே விட்டு, தொண்டை காய்ந்து விடாபடி வெண்ணையையும் உருட்டித் தள்ளி, இரவு 12 மணி ஆகினும் இருந்த இடம் விட்டு அசையா "எம்பிரான் பிள்ளையாரப்பனைப் போல," பேசுவதில் வல்லுனர்களாகிய ஆதீனங்களின் மதப் பிரசாரப் பெருச்சாளிகள்...

இவர்களுக்கு முன் நான் எவ்வாறு நிற்கமுடியும் என்று நினைத்தபோது என்னுடைய எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுக முடியாமல் திகைத்து நின்றது.

மன்னிக்கவும் !

நான் சற்று பருத்த தேகத்தையுடையவன். அதனால் தான் எண்சாண் உடம்பும் ஒருசாணாக குறுக மறுத்து, பக்கங்களிலே புடைத்து நின்று சாத்வீக சத்தியாக்கிரகம் செய்தமைக்குப் பெரிதும் மன்னிக்கவும் !!

நாள் நெருங்கிவிட்டது...... ஆரம்பத்தில் "பேஸிக் டிரெயினிங் ஸ்கூலில் சேர்ந்த மாணவனின் நிகழ்கால இருதயத் துடிப்பைப் போல்" எனது நிலை படபடத்தது... இருப்புக் கொள்ளவில்லை. ஆசிரியர்கள் சங்கத்திற்குச் சொந்தமான லைப்ரேரியில் புகுந்தேன். ஆங்கு இறந்தகால நிகழ்கால ஆசிரியர்கள் என்னை வரவேற்றார்கள்.

உடனே, கம்பனோடு கட்டிப் புரண்டேன்... பாரதியோடு பழகிப் பார்த்தேன்... பேசிப்பார்த்தேன், புதுமைப் பித்தனோடு பாளையங்கோட்டை வாய்க்கால் படித்துறை ஏதாவதுசொல்லுமா என்று எதிர்பார்த்தேன்...... ஷேக்ஸ்பியரோடு உறவாடினேன் ... ஷெல்லியுடன் எள்ளி நகைத்தேன்... பயன் ?

விழாவில், நான் பேசுவதற்கு வேண்டிய விஷயம் ஒன்றுமே கிடைத்திலது !

(நாம்) ஏதாவது ஒரு இலாகாவிற்கு மந்திரியாக வந்து அவருக்கென்று ஒரு 'பிரைவேட் செகரட்டெரி' இருந்து மந்திரிக்குப் பேசவேண்டிய விஷயத்தை 'செகரட்டெரி' தயார் பண்ணி வைக்க அதை வாசித்தால் உலகம் மெச்சும்.

நானெங்கே நம் அமைச்சரெங்கே....?

காலம் என்ற காலண்டரில் உள்ள தேதி கிழிந்து கடைசியில் 'விழாவன்றைக்கு' என்றும் வந்தாயிற்று... வியாதியஸ்தனுக்கு சிலேப்பனம் தொடங்கி விட்டது. மிருத்யுவின் வாசலில் நின்ற நோயாளியானேன்.

மகா நாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தேன். உள்ளம் ஆழத்திலே போராடிக்கொண்டிருந்தாலும் வெளியில் விட்டுக்கொடுக்காமல் வீரம் பேசும் மங்கையரின் இயல்பைப்போல, மனத்தினுள் சங்கடம் மோதி நின்றாலும் புன்முறுவலைக் கட்டாயப்படுத்தி வரவழைத்துக்கொண்டு சென்றேன். "அன்பர்கள் வருக" என்று மகா நாட்டுப் பந்தல் என்னை வாயார அழைத்தது.

"மடமை அகற்றிய மன்னர்கள் ஆசிரியர்களே"... "அறிவொளி வீசி அவனியில் புகழ் பெறு"... "ஆரம்ப ஆசிரியர் நிலை உயர உழைக்கும் உத்தமரே வருக"... "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் மகா நாட்டின் பந்தல் தூண்களில் தொங்கிக்கொண்டு நின்றன. அவைகள் என்னைக் கண்டு அழைப்பதாகத் தோன்றிய பிரமை, என்னுடைய அறியாமையை எனக்கே எடுத்துக் காட்டி இடிப்பதுபோல் தோன்றியது.

எனக்கே ஒன்றும் புரியவில்லை. ஆயிரமாயிரம் தலைகள் நான் நின்ற நிலை நோக்கித் திரும்பின. ஆசிரியர்களும், ஆசிரியைகளும் பொதுமக்களும், மாணவர்களும், குட்டிமாணவர்களும் நிரம்பிய அத் திருக்கூட்டத்திலே என்னை என் பரிதாப நிலையை காணக் கண் கோடி வேண்டும்...

மகாநாடு ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு மணி நேரந்தான் இருந்தது. மாதம் வாரமாகி... வாரம் நாளாகி...நாள் மணியாகி ...1 மணி நேர கோட்டினையும் கொடுத்தாகியது. அதற்குள் பல பேர் வந்து முகமன் கூறி விட்டுச் சென்றனர். சங்கக் காரியதரிசி கை குலுக்கிவிட்டு அவருடைய காரியத்தில் தீவிரமாய் இருந்தார். என்னை விசாரித்தவர்களுக்கெல்லாம் என்னுடைய வெண் பற்களைக் காட்டி நகை முக தரிசனம் தந்தேன்.

ஆனால் நீறு பூத்த நெருப்பாய் இருக்கும் என்னிலையாருக்குத் தெரியும்...?

மகாநாடு நடக்கும் இடம் ஒரு சிவன் கோவிலின் திறந்த உட்பகுதி. கும்பினியார் காலத்தில் ஆயுதச் சாலையாக இருந்து அறச் சாலையாக மாறி கல்வி இலாகாவின் விஸ்தரிப்புக் கொள்கையின் காரணமாகக் கல்விச்சாலையாக மாறிய இக்கோவிலின் பின் புறம் பாழடைந்த வெளவால் தூங்கும் பட்டி மண்டபங்கள் பலவுண்டு. இது கல்வி பரப்பும் நிலையமாவதற்கு முன்பு கோவிற் பெருச்சாளிகள் குறட்டை விட்டுத் தூங்கும் சுக வாசஸ்தலமாக அமைந்திருந்தது.

ஒரு மணி தேய்ந்து முப்பது நிமிடங்களாயிற்று....முதலிரவில் வாழ்க்கைத் துணைவனைச்சந்திக்கச் செல்லும் புது மணப் பெண்ணின் விவரிக்க முடியாத நெஞ்சுத் துடிப்பு...காட்டிலே, கடுங் கோடையிலே வேட்டை நாயின் முன் எதிர்ப்படும் முயலின் வேதனை மிக்க இருதயப்படபடப்பு இத்தகைய ஒரு பராபர நிலையில் எனக்கு மயக்கம் வருவதாக என் உள்ளத்திரையில் தெரியவந்தது. நான் பேச வேண்டிய நேரம் வந்ததும் என்னை எச்சரிக்கை செய்யுமாறும், அது வரை நான் மகாநாட்டுப் பக்கலில் உள்ள தொரு மண்டபத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளுவதாக உடனிருந்த நண்பர் ஒருவரிடம் சொல்லிவிட்டுக் கோவிலின் பின் பகுதியிலுள்ள மண்டபத்திற்கு நடையைக் காட்டினேன்.

மண்டபத்திற்குள் நுழைந்ததும் தலைக்கு நேரே பறந்து வந்து ஒரு வௌவால் இறக்கைகளைப் படபடவென்று அடித்துச் சென்றது. தரையெங்கும் விரவிக் கிடந்த வௌவால் புழுக்கைகளை, துண்டையே துடைப்பமாகக் கொண்டு பெருக்கிச் சற்று தலையைச் சாய்த்தேன். அங்குள்ள தூண்களில் எண்ணெய் மெருகேற்றப்பட்டு, வாயிருந்தும் பேச வழியில்லாது...கையிருந்தும் இயக்க வலுவில்லாது... காலிருந்தும் நடக்க வகையில்லாது தூணோடு தூணாக தோய்ந்து விட்ட கற்சிலைகள் என்னைப் பார்த்த பார்வை...

என்னுடைய பிரமையை இன்னும் அதிகரித்தது...

விழிகள் லேசாகச் சொருகின...

"ஹா"....கொட்டாவி விட்டு சோம்பல் முறித்தேன்

கலகலவென்று வளையொலி என்காதிற் பட்டதும் படாததுமாகக் காற்றோடு கலந்து மறைந்தது...

'களுக் என்று ஒரு சிரிப்பொலி...

'கல்லும் சொல்லாத கவியை நீரா சொல்லப் போகிறீர்"

என்று குரல்...அதைத் தொடர்ந்தது...

"சித்திரப் பதுமையிது
சிங்காரக் கோயிலிது

மற்றப் பதுமையெல்லாம்—
தங்கமே

மட்டிப் பதுமையடி—
ஞானத் தங்கமே

இந்த மனிதப் பதுமையடி"

என்ற ஏட்டிக்குப் போட்டியான குரல்... அதில் எக்காளம் கும்மரித்தது.

இந்தப் பாட்டின் கடைசி அடியைத் தொடர்ந்தது மெல்லிய கரகோஷம் என் காதில் பட்டதும் படாததுமாகக் கண்ணைமூடினேன்.

"சர்...சர்..." குறட்டை தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தது.

மகாநாடு ஆரம்பமாகித் தலைவர் முடிவுரைக்குப் பின்...நிகழ்ச்சி நிரலில் கண்டபடி....தலைவர் எழுந்து.

சபையோர்களே! இப்பொழுது உயர்திரு...அவர்கள் அண்ணல் காந்திஜீயின் அடிச்சுவட்டில் ஆரம்ப ஆசிரியர்கள் என்ற பொருள் பற்றிப் பேசுவார்கள்''.. என்று மொழிந்து தன் இருக்கையில் அமர்ந்தார்.

நான் எழுந்து மேடை மீது நின்றேன். சாரல் பலத்து பெருமழையானதைப் போல் விண்ணையும் மண்ணையும் எட்டும் வண்ணம் பலத்த கரகோஷம்... காதைத் துளைத்தது! இல்லை கர்ணபேரியைக் கிழித்தது...!!

மழை ஓய்ந்தவுடன் மக்கள் வெளியில் தலை நீட்டுவது போல் கரகோஷம் நின்றதும் பேச ஆரம்பித்தேன்...

"அறிவே வாளாகவும் ஆராய்ச்சியே போர்க்களமாகவும் மதி நிகர்ந்த வதனத்தை நிரப்பாசவும் கொண்டுள்ள எம் அரும் பெரும் தலைவர் அவர்களே!

தோளோடு தோள் நின்று ஆசிரியத் தொழில் புரியுங்கால் துணை செய்யும் என் ஆசிரிய சகோதர சகோதரிகளே...!!

எங்கள் சேவா மனப் பான்மையை ஆமோதிக்கும் வண்ணம் நடவடிக்கைகளை கவனித்து முடிவு செய்ய வந்திருக்கும் பெரியோர்களே...!!!

உங்கள் எல்லார்க்கும் அடியேனின் பணிவான அஞ்சலிகளை முதற்கண் செலுத்திக் கொள்ளுகிறேன். (கரகோஷம்)

மன்னன் மக்கள்...மதம் ஜாதி ...படித்தவர் பாமரர் உயர்ந்தவர் தாழ்ந்தவர்...முதலாளி தொழிலாளி...என்ற வித்தியாசம் வேரோடு நீங்கி, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற ரீதியில் வாழ வேண்டும் என்ற அரசியல் தத்துவம் பூரண சுதந்திரக் குடியரசுத் திட்டமாக உருவாயிருக்கின்ற இந்த வேளையிலே...

மனிதனை மனிதன் அடிமையாக்கி, அடிமை என்ற காரணத்தால் தான் பெற்ற அறிவுக் கருவூலத்தை அறிவு வறட்சியுள்ள செல்வர்களிடம் அடகு வைக்கச் செய்யும் வறுமை...ஆலைமுதல் சிறு அந்திக் கடை மனித வர்க்கத்தின் ஒரு சிறு பகுதி மாளிகை வாசம் செய்யும் அளவுக்கு மண் குடிசையில் வாழும் மற்றொரு வர்க்கத்தினரின் ரத்தத்தை—ரத்தம் தெரிக்க உழைத்த உழைப்பை ஊதியமாக மாற்றித் தரும் வறுமை...காதல் முருகி அதன் விளைவாக ஆண் பெண் சேர்க்கையை—அந்த உத்தம செய்கையை, கேவலம் வேசித்தனமாக்கிப் பத்தாயிரக் கணக்கான பெண்களை பயங்கர நோய்களின் சாசுவதமான இருப்பிடமாக்கும் வறுமை...மனிதன் சாப்பிட்டுத் தூரே எறியும் எச்சில் இலையை, காகம் தன் இனத்தைக்

கூலி அழைத்து உண்ணும் போது, அதே மனித இனத்தைச் சேர்ந்த மற்றொரு மனிதன் நாய்களுடன் போட்டியிட்டு உண்ணச் செய்யும் வறுமையான வேளையிலே... (கரகோஷம்)

உலகைத் திருத்திய உழைப்பாளர் உலகின் பல பகுதிகளிலும் தோன்றியுள்ள நேரத்து அவர்களிற் பலர் வாழும் காலத்தில் வையத் தோரால் போற்றப் பெறுமல் மறைந்த பின்பு மாநிலத்தில் புகழ் ஒளி பரவி பெருமையடைந் தோராயினர். நாம், நம்மைச் சேர்ந்தவர்...நம் சமூகம்...நம் நாடு நன்ருய் வாழ உழைத்து ஓடாய்—உடைந்த பானைகளாய் போன தியாகிகளை நினைப்பது பேசுவது என்ற நிலையே இல்லாமல் மறப்பது என்ற இலேசான பழக்கம் நம் இரத்தத்திலே புதிதாய் வளர்ந்து வரும் வேளையிலே...

காரிருளில் செல்பவனுக்கு தூரத்தே துலங்கும் ஒரு சிறு விளக்கின் ஒளி தைரிய மூட்டுவது போல், அந்த நாளில் புத்தர் பிரான் வகுத்துச் சென்ற அன்பு நெறியும், இன்னு செய்தார்க்கு இனியவே செய்ய வேண்டும் என்று இயேசு நாதர் நடத்திக் காட்டிய நெறி முறையில் நின்று ஒழுகி அருள் ஒளி காட்டிய "அண்ணல் காந்திஜீயின் அடிச் சுவட்டில் ஆசிரியர்கள்" என்ற தலைப்பின் கீழ்—இந்த வேளையில் அறிவுச் செல்வம் நிரம்பப் பெற்ற இத் திருக் கூட்டத்திலே அடியேன் என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சிறிது உரைக்கின்றேன். பிழை பல காண நேரின், குறைகளைந்து நிறை செய்ய உங்களை இறைஞ்சுகின்றேன். (கரகோஷம்)

குடும்பத் தலைவன் காலமாகி விட்டால் அவன் தன் சந்ததியார் நன்கு வாழக் செல்வம் திரட்டி வைத்துப் போகின்ருன், நமது தலைவர்...நமது தேசப் பிதாவான நம் பாபு விட்டுச் சென்றவை அவருடைய சீரிய சிந்தனைகள், செப்பனிடப்பட்ட இலட்சியங்கள். அதில் ஆசிரியர்களாகிய நாம் கைக்கொண்டு நடப்பதற்கு ஏற்றவை பல. இக்காலத்திற்கும் கருத்திற்கும் இசைந்தோடும் நாம் ஆசிரியர்கள். எனவே முதன் முதலாக நோக்க வேண்டியது கல்வி. அதாவது தேசியக் கல்வி. உழைப்பின் தத்துவத்தை அருமையாக உலகிற்கு உணர்த்தும் சீரிய கல்வி. அண்ணல் அவர்கள் சுயதேவைப் பூர்த்தி என்ற அருமையான அடிப்படையின் கீழ் வார்தாக் கல்வித் திட்டமொன்றை வகுத்து, அதன் கண் மாணவர்களைப் பழக்கின் தேச நிர்மாண வேலை தீவிரமாக நடைபெறுமென வரையறுத்தார்.

இக் கல்வியின் அடிப்படையில் ஆரம்பத்திலிருந்தே பயிற்சி பெற்று இதயப் பண்பை நல்ல முறையிலே அபிவிருத்தி செய்த ஒரு குழந்தையைப் பாருங்கள்... அவன் பயிலும் கல்வியில் நூல் நூற்றல், தச்சு வேலை பயிர்த் தொழில் போன்ற பயனுள்ள

தொரு வேலை இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவன் செய்து வருகிற தொழில் பற்றிய அடிப்படையான உண்மைகளும், கையாளுகிற கருவிகளின் உபயோகமும் அவற்றைச் செய்யும் முறையும் அவனுக்குக் கற்பிக்கிறார்கள் என்றும் வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் ஆரோக்கியமான திண்ணிய தேகம் அமைவதோடு கூர்மையான அறிவும் வாய்க்கும். அவனுடைய அறிவு வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல; தினந்தோறும் பெற்ற அனுபவத்திலே வேரூன்றி நேராகக் கண்ட உண்மை அறிவாகும் அது. தொழிலைப் புத்திக் கூர்மையோடு திறமையாகச் செய்வதற்குக் கணிதமும் வேறு சில கலைகளும் அவனுக்கு உபயோகமாக இருக்கும்; தொழில் கல்வியுடன் பெறும் அறிவுப் பயிற்சி காரணமாக, அந்தக் கலைகளிலும் அவனுக்குப் போதிய அறிவும் ஏற்படும்பொழுது போக்குக்காகச் சிறிது இலக்கியப் பயிற்சியும் பெற்றுக் கொண்டால் சகல அம்சங்களிலும் பூரணமானதொரு கல்வியைப் பெற்றவனாகிறான். உள்ளமும் உடலும் விரிவடைகின்றன. அறிவு உடல் உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே இவ்வாறு ஒன்று கூடினால் தான் மனிதன் மனிதனாகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.



இத்தகைய உண்மையான வார்தாக் கல்வி முறையைக் கற்றவர் நம்மில் பலர் இருப்பது கண்டு மகிழ்வெய்துகிறேன். காந்திஜி ஓர் அறிவாளி. ஆனால், இவர் போன்ற அறிவாளிகளுக்குக் குழந்தைகள் சிலவே இருக்க முடியும். ஆனால், நம் போன்ற சிஷ்யர்களின் கூட்டமோ ஏராளமாக இருக்கும். உலகத்திற்கு வழங்க வேண்டிய நன்மைகளையெல்லாம் இந்த சிஷ்யர்கள் மூலமாகவே வழங்க முடியும். நம் போன்ற சிஷ்யர்களைப்போல எவராலும் எப்பொழுதும் எந்தக் காலத்திலும் ஏன் இந்த அரசியலாராலுங்கூட பரப்பமுடியாது. முடியவேமுடியாது (கரகோஷம்)

மனுதர்ம சாஸ்திரத்திலே தீண்டத்தகாதவை என்ற பட்டியலிலே நான்கு பொருட்கள் வருகின்றன. அதில் ஒன்று படித்த சூத்திரன். தீண்டத்தகாதவற்றுள் சேர்க்கப்படுகின்றான். ஆனால், இன்றைய காலத்திலோ பண்டைய தீவிர சாதிப் பூசல்கள் ஒழிந்து, படித்த சூத்திரரும் பட்டம் பதவி பெற்று, பாராளும் மன்றத்திலே பதவியேற்றுப் பணிபுரியுங் காலத்தும் தீண்டாமை என்ற நோய் வேற்றுருக் கொண்டு தனிப்பட்ட சாதியினரைத் தாக்கி நின்றது.

இதனைப்பற்றிக் காந்தியடிகள் சொல்லுங்கால் — " இப்போது இருந்து வரும் ஜாதிப் பாகுபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. இது முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கின்றது. மல

மூத்திரத்தைப் போலவே இதையும் ஒதுக்கித் தள்ள வேண்டும். மனிதர்களிடையில் வேற்றுமைகள் உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நாம் எல்லோரும் சரி நிகர் சமானமானவர்களே. நான் சொல்லுகிற சமத்துவம் ஆன்மாவைப் பற்றியது; உடம்பைப் பற்றியதன்று. தீண்டாதவர்களை நாம் உயர்த்த வேண்டுமானால் ஜாதிப் பாகுபாடுகளை வைத்துக்கொண்டே உயர்த்த முடியாது. மத வேற்றுமையும் சாதி வேற்றுமையும் பிளவை உண்டாக்குகின்றன...” என்றார்.

ஆனால் தாயறியாத சூலில்லாததைப்போல் நாமறியாமல் தீண்டாமையை ஓட்டிவிட முடியாது. குழந்தைகளின் உள்ளம் களிமண்; ஆசிரியர் ஓர் சிற்பி. தன் சிந்தனைக்கும் செயலுக்கும் ஏற்ற வகையில் குழந்தையின் தன்மையை மாற்ற முடியும். மொகலாய சாம்ராஜ்யத்தை ஆட்டி வைத்த- மராட்டிய சாம்ராஜ்யத்திற் பெருமை மிக்க சிவாஜி மன்னன் அத்தகைய வீரனாய்த் திகழ்வதற்கு காரணம் அவனது அன்னை ஜீஜீபாய். பெற்று வளர்த்த அன்னை மாத்திரமல்ல— உற்றது சொல்லி அறிவு வளர்த்த ஆசிரியருங்கூட...

பள்ளியில் பல சாதிக் குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களுள் இளமையில் சகோதர அன்பு பூண்டு சமத்துவமாக உறவாடுகின்றன. அவர்களுடன் ஆசிரியர் நெருங்கி, தீண்டத் தகாதார் என்ற ஜாதிப்பிரிவில் உள்ள குழந்தையிடம் மற்றவர்கள் வேற்றுமை காட்டாவண்ணம் போதிப்பாராயின் குழந்தைகள் தாம் எல்லோரும் ஒன்று என்று எண்ணும் தெய்வீக மனப்பான்மை கொள்ளுகின்றன. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற தெய்வீக மணம் அப்பொழுது கமழுகின்றது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா... தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற மனோதத்துவ பழமொழியும் ஈண்டு சிறிது கவனிக்க வேண்டற்பாலது.

பாரம்பரியத்தில் ஒருவன் எப்படியிருந்த போதிலும் சூழ்நிலைக்கேற்றபடி அவனை மாற்றியமைக்கலாம். பள்ளிக்கூடம் ஒரு சிறந்த சூழ்நிலை. அங்கு திறமையான அண்ணலின் திட்டத்தை நன்குணர்ந்த ஆசிரியரின் பொறுப்பில் உருவாகும் குழந்தை தீண்டாமை என்பது பற்றி எண்ணவே இடமில்லை. எனவே அரசியலாரும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை இன்றைக்கு மாத்திரம் அல்ல என்றென்றைக்கும் மறையா நிற்கும். ஆனால், இன்றைய நிலையில் அவரது வாழ்க்கைத் தரந்தான் உயரவில்லை. இது பற்றிய பிரச்சினைகளை அலசிப் பார்க்கவே இந்த மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. அரசியலாருக்கு நமது தீர்மானங்களை

அனுப்புவோம். அவர்கள் இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இதன் மூலமாக நமது குரல் எதிரொலிக்கட்டும். ஆகவே நமதுநிலை உயரப்பாடு படுகிறோம்.... பாடுபடுவோம்,... பாடுபட்டுக்கொண்டே யிருப்போம். ஏனெனில் நாம் அண்ணல் காந்திஜியின் அடிச்சுவட்டில் வந்த ஆசிரியர்கள். (கரகோஷம்)

இன்றைக்கு நமக்குக் குடியரசு மலர் கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், நம்மவர் குறைதான் இன்னும் தீர்ந்த பாடில்லை. காந்தியடிகளின் பொன்மேனியே மணமிக்க குடியரசு மலராகப் பரிணமித்திருக்கிறது என்று கொள்வோமானால் அதில் சாந்தம் ஒளி வீசும், சத்தியம் பேசும், சன்மார்க்கம் பரப்பும், சமதர்மம் வீசும், இம் மலர் வாடாதிருக்க வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பொறுப்புகளை உணர்ந்து காந்தியடிகளின் அறநெறிகளைப் பாதுகாக்கும் தர்மகர்த்தாக்களாக, அண்ணலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் ஆசிரியர்களாக, நடந்துகொள்ள நமக்கு அவரே திருவுளம் பாலிக்கவும், அண்ணலின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் உங்களில் ஒருவனாக நான் எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்." (கரகோஷம்)

உடலெல்லாம் வியர்த்தது; ஒரே புழுக்கம், கரகோஷம் கேட்டுக் கண் விழித்தேன். எதிரே சங்கக் காரியதரிசி நின்றிருந்தார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "என்ன சார்! நான் பேச வேண்டிய முறை வந்து விட்டதா? சே! ரொம்ப நேரம் தூங்கிவிட்டேன் போலிருக்கு. தூக்கம் சண்டாளம் என்பார்கள்" என்றேன்.

"பரவாயில்லை! உங்களை நான் எழுப்பிவிட வேண்டிய கட்டத்திலேதான் வரவேண்டியிருக்கிறது. மகாநாடு முடிந்து எல்லோரும் போயாச்சு நீங்கள் ஒருவர்தான் பாக்கி. கோவில் பூட்டுவதற்கு முன்பாக உங்களுக்கு தாக்கல் கொடுத்து விடலாமென்றுதான்... என்று இழுத்தார்.

"அப்படியானால் நான் பேச வேண்டிய அ. ஆ." என்பதற்குள் காரியதரிசி இடைமறித்து, சமயத்தில் உங்களைக் காணவில்லையாதலால் அந்தப் பொருளையே எடுத்து விட்டோம் என்று சொல்லி விட்டுச் சாவதானமாக நடையைக் கட்டினார்.

எனக்கு பெரும் குழப்பமாயிருந்தது. நான் இதுவரை மகாநாட்டில் பேசிக் கரகோஷம் பெற்றவை யெல்லாம், கனவில் கண்ட காட்சிதானா? ஐயோ, பாழும் உறக்கமே சதி செய்து விட்டாயே என்று புலம்பியவாறு துண்டை உதறிவிட்டுத் தோளில் போட்டு நடந்தேன். 'கலகல' வென்ற நகைப்பொலி கேட்டது போன்ற பிரமை, அதைத் தொடர்ந்து,

(28-ம் பக்கம் பார்க்க)

# நாவினாற் சுட்ட வடு

R. ஜான் கிருபைவரம் தலைமை ஆசிரியர். இந்து ஆரம்பப் பாடசாலை
குருவன் கோட்டை தென்காசி வட்டம்
திருநெல்வேலி மாவட்டம்.

'தடார்' என்ற சப்தம்!

பாவம், அந்தப் பெரியவர் கீழே விழுந்து கிடந்தார். அதைத் தொடர்ந்து 'இடி இடி' யென்னும் சிரிப்பு ஒலிகள்!

'கண், கின் இருக்கிறதோ இல்லையோ?'

'வயது ஆகி விட்டது அல் லவா?''

'எதிர்பாராதது!

'ஐயோ, பாவம்டா! வாடா, தூக்கி விடலாம்!

ஒரு குக்கிராமம்; அதில் ஒரு சின்னஞ் சிறு தெரு, புள்ளி மான்கள் எனத் துள்ளி விளையா டிக் கொண்டிருந்த சிறுவர்கள் கூட்டம். அவர்களின் குதூகலத் தைக் குலைத்த ஒரு எதிர்பாரா நிகழ்ச்சி!

ஆமாம், அவர்கள் எதிர்பார்க்க வில்லை!

யாரோ, வீசி எறிந்து விட்டுச் சென்ற வாழைப் பழத்தோல் வயோதிகர் ஒருவரை வீழ்த்தி விட்டது. நடுத் தெருவில் இந்தச் சோகக் காட்சியை, சுகக் காட்சி யாகச் சிறுவர் கண்டனர். பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன் எடுத்த திரைப்படத்தில் காணும் 'அழகுக் கட்டத்தை' ஹாஸ்ய நிகழ்ச்சியாகக் ரசிக்கும் தற்காலப் புதுமையாளரைப் போல!

கீழே விழுந்தது, வேதனை யாகப் படவில்லை கிழவருக்கு. ஆனால்...?

சிறுவரின் சிரிப்பு நினைக்கனலை உருவாக்கிற்று!

பாமரரின் மையத்தில் சீராக வாழ்ந்து வீரதீரர் என்றும், அறி வுச் சுடர் என்றும் கீர்த்தி பெற் றுரே அந்த இறந்த காலத்தை எண்ணிப் பார்த்தார். அவ்வளவு தான், எரிமலையானார்!

'பெற்றோர்களே! சிசுக் களுக்குச் சிரிக்கக் கற்றுக் கொடா தீர்! வன விலங்குகள், வானத் தில் வட்டம் இடும் பறவைகள்

---

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

"சித்திரப் பதுமையிது
சிங்காரக் கோயிலிது
மற்றப் பதுமையெல்லாம் —
தங்கமே
மட்டிப்பதுமையடி — ஞானத்
தங்கமே
இந்த மனிதப் பதுமையடி."

என்று கல் சொன்ன கவிதை காற்றில் தோய்ந்து மறைந்தது.

புன்முறுவல் பூக்கின்றனவா? அழகு கொழிக்கும் சிலேகளை உற்று நோக்குங்கள், நகைக்கின்றனவா, என்று!'—இவ்விதம் ஒரு 'புதுக் கண்டு பிடிப்பை'—ஆலோசனையை—ஆங்காங்கே கூறி வர ஆரம்பித்தார்.

கேட்ட சிலர், கேலி புரிந்தனர்; சிலர், அபூர்வயோசனை என்றனர்; பலர், சிரிப்பு இயற்கை என மனதுள் நினைத்து, அவர் மீது பரிதாபப் பட்டனர்!

* * *

சிரிப்பு இயற்கை; சிந்தனையைத் தூண்டும் அறிவும் அப்படியே. இரண்டுக்கும் ஏற்றத் தாழ்வு கிடையாது, அடிப்படையில்.

இன்பம் வரும்போது சிரிப்பு; இன்னல் மோதும் பொழுது சிந்தனை. ஆனால் ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல, சிற்சில வேளைகளில் சிந்தனை சிரிப்பைத் தருகிறபடியால்!

* * *

அண்மையில் காரைக்குடிக்குப் பயணம் செய்த ஒரு அமைச்சர் ஒரு நூதன யோசனையை—(சொந்த யோசனை தான்!)—வெளியிட்டிருக்கின்றார்!

"ஆரம்பப் பள்ளிகளை மூடிவிட வேண்டும்"

'நல்ல' யோசனை! ஏன்?

விஷப்பூண்டை ஒழிக்க வேரோடு பிடுங்க வேண்டும் என்பார்கள் அல்லவா? அதைப் போல, கல்வி நிலையங்களை அடியோடு அழிக்க வேண்டும் என்றால் அதற்கு ஆதி மூலமாகத் திகழும் ஆரம்பப் பள்ளிகளைத் தகர்த்து எறிய வேண்டும்! அவ்வளவுக்கு விஷமா படர்ந்திருக்கிறது, வித்தியாசாலைகளில்?

கல்விச் சாலைகளின் மீது இத்தனை கோபம் ஏன்? காரணம் என்ன?

அவர் கூற்று: 'சர்க்காரைத் திட்டுகிறார்கள்'

அறிவு ஊட்டப்பட்ட மக்கள் அரசாங்கத்தை ஏசுகின்றார்கள் என்றால் எந்த அமைச்சரால் சகிக்க முடியும்? 'நாம் இந்நாட்டு மன்னர்; நம்மை நாமே ஆளுகிறோம்' என்ற உணர்ச்சி இல்லையா அவர்களிடம்?

'படித்து விட்டு வேலை கேட்கிறார்கள்; இல்லை என்றால் 'திட்டுகிறார்கள்—' இது அமைச்சர் கூறியது.

மனிதர்களுக்கு, ஏன், ஜீவராசிகள்எல்லாவற்றிற்கும்—உணவு, உடை, இருப்பிடம்—தேவை. அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் 'வேலை' கேட்கிறார்கள்! இது தவறா? சரியா? என்பது ஒரு புறம் இருக்கட்டும்...!

சென்னை மாநிலத்திலே 100-க்கு 10 அல்லது 13 பேர் படித்தவர்கள் என்றால், அந்த நபர்கள் அத்தனை பேரும் (அமைச்சரையும் சேர்த்துத் தான்!) கெட்டவர்களா, ஏசுகிறார்களா? மற்றைய பெரும்

பான்மையினர் (Majority) நல்லவர்களா, நாவார வாழ்த்துப் பண் இசைக்கின்றார்களா, என்று யாவரும் நினைத்துப் பார்க்க வேண்டியது இருக்கிறது.

'ஏன் இந்த நிலை?' என யோசித்துப் பார்ப்பதற்கு அறிவுச் சாலைகளில் நுழைந்து—'அ, ஆ' —பயிற்றுவிக்கப் பட்டிருந்தால் தான் கூடும், என்று முடிவு செய்ய இந்த 'அநுபவம்' மிக்க அமைச்சருக்கு எப்படி 'அறிவு' இடம் தந்தது என்று வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறது, 'அவரை' அமைச்சராக மாற்றும் 'தகுதி'யைத் தந்த ஆசிரிய சமூகம்!

படித்தவர்கள் மட்டும் தான், ஆரம்பப் பள்ளிகளில் நுழைந்தவர்கள் மாத்திரம் தான் சர்க்காரை வசை மாரி பொழிய வந்து விட்டார்கள் என்ற அமைச்சரின் குற்றச்சாட்டையாரும், குறிப்பாக ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள், ஒப்ப முடியாது. ஒத்துக் கொள்ள 'சாதாரண மூளை' கூட இடம் தராது!

ஆற்றைக் கடக்க தோணி; அறியாமையைத் தாண்ட கல்வி. ஆற்றை நீந்தியும் கடக்கலாம் அல்லவா?

* * *

படிப்பு மீதும், கற்றோர் மீதும் கண்டனக் குரலை எழுப்பினார், அந்த அமைச்சர்.

ஆனால்...!

ஆச்சரியம்!

அதே நேரத்தில் காரைக்குடி நகரசபை 3-வது வார்டு வித்தியா சாலையின் புதுக் கட்டடத்தைத் திறந்து வைத்தார், அதே மந்திரி!

போதனை வேறு, சாதனை வேறு!

இந்த விஷயத்தில் அது தான் முடியும்; அது தான் கண்ணியமும் கூட! அறிவைத் துண்டிக்க யாரால் கூடும்?

எனவே, அமைச்சரின் அந்த சொந்த அபிப்பிராயத்தைப் பற்றி யாரும் சோர்வோ, கலக்கமோ நடுக்கமோ கொள்ளுவதில் அருத்தம் இல்லை! எனினும்,

!... ... ... ஆறாதே
நாவினாற் சுட்ட வடு'

# கல்வித் திட்டமும் களர் நிலமும்

29 MAY 1955
MADRAS

(மா இளங்கோவன். தேசிய ஆரம்பப்பள்ளி, போடி நாய்க்கன்பட்டி, திண்டுக்கல்)

என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த ஒரு நண்பர்-அவர் ஒரு ஆசிரியர்-இன்றைய கல்வித் திட்டத்தைக் களர் நிலத்திற்கு ஒப்பிட்டுவிட்டு, "புற்பூண்டுகள் அதில் விளையலாமே தவிர, நற்பண்பும் நாட்டுப் பற்றுமுள்ள மாணவ மாணவிகள் அதில் விளைவதில்லை" என்றார்.

எனது நண்பர் சொன்ன இதை நகைச்சுவை என்று மட்டும் கொள்வதற்கில்லை; ஒரு சமயம் அவர் இதனை வேடிக்கைக்காகக் கூறியிருக்கலாம் ஆனால், இப்போழ்துள்ள கல்வித் திட்டத்தின் அடிப்படை அம்சங்களைச் சிறிது ஊன்றிக் கவனித்திருப்போர் எவரும் ஒப்புக்கொள்வர் இதனை.

ஏட்டுக்கல்வி என்பார்களே அதைப்போலவே, வாழ்க்கைக்கு உதவாத தத்துவத்தை — ஏன், வாழ்விற்குப் புறம்பான தத்துவத்தை மாணவ மாணவிகள் மூளையிற் செலுத்தி உள்ளப் பண்பை சிதறடித்து விடுகிறார்கள்.

ஆங்கிலேயன் அரசோச்சிய காலத்தில் அவனால் அமைக்கப்பட்ட பாடத்திட்டம்—மக்களை தங்கள் அடிமைகளாக-சுதந்திர உணர்ச்சியோ, சுயமரியாதையோ அணுவளவுமின்றி இடப்பவர்களாக-இருக்க வகுக்கப்பட்ட பாடத்திட்டம், அதைத்தான் சிறிது முலாம் பூசி மாணவ மாணவிகள் மத்தியில் விரித்திருக்கிறார்கள், நம்மை ஆளவந்தார்கள். மதுவின் மயக்கத்திலே மனத்தைச் செலுத்தியவர்கள் பேசுவார்களே, "பழைய மது — புதிய கிண்ணத்தில்" என்று, அதைப்போல!

உங்களுடைய ஓய்வு நேரத்தில் நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

படித்துப் பட்டமும் பெற்று பள்ளியை விட்டு வெளியேறும் மாணவன், தான்கற்ற கல்வியை—செல்வங்களைத் தந்து பெற்ற செல்வத்தை எந்த வகையில் வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்கிறான்? கல்வியைப் பயன்படுத்தி எத்தகைய வாழ்வு நடத்துகிறான்? அந்தக் கல்வியால் அவன் அடையும் பலன் என்ன? அதனால் மக்கள் சமுதாயம் பெறும் பலன் என்ன? நாடுபெறும் நலன் யாது?

விஞ்ஞானத்தைத் தன் விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்ட ஒரு மாணவன் விஞ்ஞானியாவதில்லை; இந் நாட்டில்-வியாபாரியாகத்தான் சென்றிருப்பான்!

சரித்திரம் கற்ற ஒரு மாணவன் வரலாற்று ஆராய்ச்சி வல்லுநன் ஆவதில்லை — சன்மார்க்கச்

சங்கத் தலைவராகப்போய்ச் சேரு வான்!

தமிழ்ப்பற்றுள்ள ஒரு மாணவி, தமிழ்ப் பண்டிதராக மாற முடிவ தில்லை—தாயாக மட்டும் முடி கிறது!

இயற்கையில் இதயத்தை இழந்து அதில் இன்பங்காணும் ஒரு மாணவி கவிதையியற்றுபவ ளாகவா ஆகிறாள் — இல்லை; அதற்கு முற்றிலும் மாறுபட்ட வேறொரு துறையைத்தான் அவ ளால் அடைய முடியும்!

எழுதிக்கொண்டே போனால் பட்டியல் விரியும்—இன்னும் எத் தனையோ உதாரணங்கள் காட்ட லாம் இவற்றைப்போல!

எனக்குத் தெரிந்த ஒரு ஆரம் பப்பள்ளியில் வகுப்பறையின் சுவரில், கொட்டை எழுத்துக் களில்அழகாகப்பொறித்து வைத் திருக்கிறார்கள், "அச்சந் தவிர்", "ஆண்மை தவறேல்" என்று. அதே வகுப்பில் நடக்கும் பாடம் —அதில், "அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்" என்று மீண் டும் மீண்டும் — திரும்பத்திரும்ப— மாணவர்கள் மனத்தில் நன்றாகப் படியும் வரை—சொல்லித் தருகி றார் அந்த ஆசிரியை! நானும் நேரில் கண்டேன்! என்ன செய்ய முடியும்? பாடதிட்டம் அப்படி!

"ஏற்பது இகழ்ச்சி" என்று சொல்லித்தந்த அதே ஆசிரியர்— அதே நேரத்தில்—அதே வகுப் பில்—"ஐயமிட்டு உண்" என்றும் படித்துத் தருவார்! மாணவர் களும் படித்து மேலே செல்வார் கள்!

எத்தனை முரண்பாடுகள் இவை இரண்டுக்கும் இடையில் இருக்கின்றன? ஏன்? இந்த வேற் றுமை?—எவரும் சிந்திப்பதில்லை; மாற்ற முயலுவதுமில்லை!

இந்த முரண்பாடுகள் ஆரம்பப் பள்ளியில் மட்டுமல்ல-உயர்நிலைப் பள்ளியிலும் காணலாம்! முதற் படிவத்தில் ஒரு நீதிக் கதை!

அநியாயமாக ஒரு ஆட்டை அபகரித்து வந்ததாம் ஒரு நரி. அதனிடமிருந்து அந்த ஆட் டைப் பறித்துக்கொண்டதாம், வேறொரு சிங்கம்! ஆகவே, நேர் மைக்குப் புறம்பாக எதை அடைந்தாலும் அநியாயமாகவே இழந்து விடுவோம் — என்பது அதிலிருந்து அறியப்படும் நீதி.

ஒரு மாணவன் எழுந்து கேட் கிறான்: "ஆமாம், ஐயா! நரி, அநியாயமாக ஆட்டைப் பெற் றது — இழந்தது! அதைப் பொறுத்தவரை நீதி சரிதான்! ஆனால் சிங்கமும் அநியாயமாகத் தானே அந்த ஆட்டை அபகரித் துக் கொண்டது; ஆனால், நரி யைப்போல, அது இழந்துவிட வில்லையே!" என்று.

என்ன பதில் சொல்ல முடியும் அந்த ஆசிரியரால்! எத்தகைய பரிதாபமான நிலையில் அந்த ஆசிரியர் அப்பொழுது இருப் பார்?-சிந்தித்துப் பாருங்கள்.

தமிழாசிரியர் வருவார்; நில வைப் பற்றிய பாடலுக்குப் பத

வுரை கூறுவார்; அதில், "இராகு கேது எனும் பாம்புகள் நிலவை விழுங்குவதால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது" என்று பொருள் அறியப்படும்! மாணவர்கள் குறிப்புப் புத்தகத்தில் குறித்தும் கொள்வார்கள்.

அதற்கு அடுத்த வகுப்பில் விஞ்ஞான ஆசிரியர் வந்ததும், "பூமி, கதிரவன், நிலவு ஆன மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படுகிறது!" என்பார். அதையும் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்வார்கள் மாணவர்கள்.

ஆனால், எது உண்மை? மாணவர்கள் எதை ஏற்றுக்கொள்ள வேண்டும்? தமிழாசிரியர் சொன்னதையா? விஞ்ஞானம் விளைத்துத்தந்த விளக்கத்தையா?

இதுபோன்ற எத்தனையோ வேறுபாடுகள்—எண்ணிலும் ஏட்டிலும் அடங்காதவை.

இவற்றால் இள உள்ளங்கள் என்ன பயனை அடைகின்றன? பள்ளியின் படிகளைவிட்டு இறங்கும்போது இவற்றையெல்லாம் முற்றிலும் மறந்தால் தான் இந்தச் சமுதாயத்தில் வாழ முடிகிறது. எனவே, பிறகு எதற்கு இக்கல்வி?

கற்றவர்கள் சிந்திக்க வேண்டும் இவற்றைப் பற்றி!

அறிவைப் பெற பள்ளி செல்லும் மாணவர்கள், புராண இதிகாசகால கருத்துக்களையும் விளக்கங்களையும் பெற்று வீடு வந்து சேருகின்றனர், குளிக்கச் சென்று சேற்றை அள்ளிப் பூசித்திரும்புவதைப் போல!

இத்தகைய — கிழக்கும் மேற்கும் போன்ற வேறுபாடுகளை வைத்துக் கொண்டு, ஆசிரியர்கள் என்ன போற்றுதற்குரிய செயல் செய்துவிட முடியும்? ஒரு நாட்டிற்கோ, தனி மனிதனுக்கோ இவற்றால் என்ன நன்மைவிளைந்துவிடப்போகிறது?

பாடத் திட்டத்தின் படியே பார்க்கும் போது, படிக்கச் செல்வது பகுத்தறிவைப் பெற அல்ல; அதைப் பாழாக்கிப் போடத்தான் என்றாகிறது! வாலிப உள்ளத்தையும் மூளையையும் வறண்ட பாலையாக்கவே பாடுபடுகிறது கல்வித் திட்டம்!

கல்வித் திட்டத்தை அவ்வப்போது மாற்றி அமைத்துத் தந்து விட்டால் மட்டும் போதாது! ஆங்கிலேயன் அமைத்து அளித்த அடிப்படை அம்சங்களை அவனுடனேயே கப்பலேற்றி அனுப்பிவைத்து விட்டு—மாணவ மாணவிகளின் மனதில் மாசற்ற ஒளி திகழ-ஊதியத்திற்காக மட்டுமின்றி வாழ்வதற்கு உறுதுணையாக விளங்கும் புதியதொரு கல்வித் திட்டத்தைப் புகுத்தக் கல்வி அமைச்சரும், சம்பந்தப்பட்ட சர்க்கார் அதிகாரிகளும்-ஆசிரியர், மாணவ மாணவிகளும் கூட— அவர்கள் நலனுக்குழைக்கும் பத்திரிகைகளோடு சேர்ந்து பணியாற்ற வேண்டும்!

(34—ம் பக்கம் பார்க்க)

# கல்வி அபிவிருத்திக்கு ரூபா 155 கோடி

## ஐந்தாண்டுத் திட்ட விவரம்

கல்வி அபிவிருத்தி ஐந்தாண்டுத் திட்டத்தில் 155·66 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இத்தொகை சமூக நலசேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 46 சதவிகிதமும் முழுத் திட்டத்தின் மொத்தத் தொகையில் 7 சதவிகிதமுமாகும்.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 39·02 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் திட்டங்களுக்குச் சம்பந்தப்பட்டது; அவை ராஜ்ய சர்க்கார்களின் கூட்டுறவுடன் நிறைவேற்றி வைக்கப்படும். இத்தொகையை உயர்தரக் கல்விக்காக, முக்கியமாய்த் தொழில் நுட்பக் கல்விக்காகவும், கணிசமான அளவில் பரிசோதனார்த்த வேலையும் ஆராய்ச்சி வேலையும் நடத்துவது அவசியமாயிருக்கிற ஆதார-சமூகக் கல்வி ஏற்பாடுகளின் அகில இந்திய அம்சங்களுக்காகவும் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தொழில் நுட்பக் கல்வி விஷயத்தில் பட்ட பிற்காலப் படிப்பும் ஆராய்ச்சியும் வற்புறுத்தப்படும்; பட்டப் படிப்புக்கு முந்திய மட்டத்தில் இதுவரை நடந்துள்ள வேலை ஸ்திரப்படுத்தப்படும்; அச்சுத் தொழில் நுட்பம், கம்பளத் தொழில் நுட்பம், பட்டுத் தொழில் நுட்பம் முதலிய சில விசேஷத் துறைகளில் பட்டப் படிப்புக்கு முந்திய மட்டத்தில் போதனையளிப்பதற்காக விசேஷ வசதிகள் செய்யப்படும்; கட்டட நிர்மாணம், நகர அமைப்பு, ஆகிய துறைகளுக்கு வசதிகள் செய்து தரப்படும். சர்வகலாசாலைகளில் சரித்திரம், பொருளாதாரம் முதலிய விஷயங்களில் பயிற்சி வசதிகளைப் பலப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புது டில்லியில் தேசிய மத்திய நூல்நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆதாரக் கல்வி விஷயத்தில், ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஆதாரக் கல்விக்கு முந்திய பயிற்சிப் பள்ளிக்கூடம் முதல் பட்ட பிற்கால ஆதாரக் கல்விப் பயிற்சிக்

---

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது தான், பெற்றோர் பாடுபட்டுப் பெற்று பள்ளியில் செலவிடும் பணத்திற்கு ஒரு பயனும்—மாணவ மாணவிகள் உலகத்து ஒளி மணிகளாகத் திகழும் ஒரு வாய்ப்பும்—புதுமை உலகிற்குச் செல்லும் புதிய சமுதாயத்தை அமைக்கவும்-நாட்டின் நலத்தில் நல்லதொரு மாற்றமும் காணமுடியும்! முன்னேற்றப் பாதையில் முழு வேகத்தோடு விரைய முடியும்!

கல்லூரி வரையில் பூரணமான ஆதாரக் கல்விப் பிரிவு ஒன்றுவது குறைந்த பட்சம் இருக்கும்படி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கல்வி முறைகளில் ஆராய்ச்சிகளை நடத்துவது அதற்கான புஸ்தகங்கள் முதலியவைகளைத் தயாரிப்பது ஆகியவை நோக்கமாக வைத்துக் கொள்ளப்படும். சமூகக் கல்வி விஷயத்தில் பள்ளிக்கூடம்—சமூக நிலையம் ஆகியவை கூட்டாக அமையும்படி ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வது, சமூகக் கல்வி ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஜனதாக் கல்லூரிகளை ஏற்படுத்துவது, புஸ்தகங்கள் முதலியவைகளையும் காட்சி—கேள்வி மூலம் கல்வி போதிப்பதற்கான சாதனங்களையும் தயாரிப்பது ஆகியவை விசேஷ அம்சங்களாக இருக்கும்.

## ராஜ்ய திட்டங்கள்

ராஜ்யங்களின் திட்டங்களுக்கு 115·98 கோடி ரூபாய் செலவிடப்படும், அதாவது வருஷந்தோறும் 23·20 கோடி ரூபாயை விட 27 சதவிகிதம் அதிகமாகும். மத்திய சர்க்கார் வகையில் செலவிடப்படக்கூடிய தொகையும் பிரதானமாக ராஜ்யங்களிலேயே தான் செலவிடப்படுமாகையால் ராஜ்யங்களின் ஆதாரங்களை அது மேலும் பலப்படுத்தும்.

பல்வேறு மட்டங்களில் விஸ்தரிப்பு வேலைகளைச் செய்வதற்காகவே பெரும்பகுதியும் செலவிடப்படும். வெவ்வேறு துறைகளிலும் அதன் மூலம் கிடைக்கும் பலன்கள் பின்வருமாறு இருக்கும் :

1. **பிரதமக் கல்வி:**—பிரதமக் கல்விப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 17 சதவிகிதம் அதிகரிக்கும்; அப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 25 சதவிகிதம் பெருகும். இதற்கு ஏற்றாற்போல், ஜூனியர் பேசிக் பள்ளிக்கூடங்கள் எண்ணிக்கை 22 சதவிகிதமும் மாணவர் எண்ணிக்கை 81 சதவிகிதமும் அதிகரிக்கும். பிரதம, ஜூனியர் பேசிக் பள்ளிக்கூடங்களில் 6 வயது முதல் 11 வயது வரையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 55·7 சதவிகிதமாக இருக்கும்; 1950-51—ல் அது 44·5 சதவிகிதமாக இருந்தது.

2. **செகண்டரிக் கல்வி :**—செகண்டரிப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 18 சத விகிதம் அதிகரிக்குமென்றும் மாணவர்களின் எண்ணிக்கை 32 சதவிகிதம் பெருகுமென்றும் மதிப்பிடப்படுகிறது. அவைகளில் பயில்பவர்களாக அமையக்கூடிய 11–17 வயது வரம்புகளுக்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரம், 1950–51-ல் 10·8 சதவிகிதமாக இருந்தது. 1955–56—ல் 13·3 சதவிகிதமாகப் பெருகிவிடும்.

3. **தொழில்-துறைக்கல்வி:**—(தொழிற்சாலைப் பள்ளிக்கூடங்

(36—ம் பக்கம் பார்க்க)

# எஸ். எஸ். எல். ஸி. வடிகட்டும் முறை ஒழியவேண்டும்

## வாத்தியார்கள்

மாணவர்களுக்குத் தகுதி யில்லை என்பதற்கு ஆகவே நிறுத்தப்படுகிறார்கள் என்று சொல்லும் வாத்தியார்களைப் பற்றி சில சொல்ல ஆசைப்படுகிறேன். உலகத்திலே இருக்கும் வேலைகளில் எல்லாம் பொறுப்பற்ற வேலை நமது நாட்டு வாத்தியார் வேலை தான் ஆகும். ஏதோ பள்ளிக் கூடத்துக்கு வரவேண்டும்; அதுவும் காலை 10 மணிக்கு வந்து, 10½–க்கு வேலை துவக்கி, பகல் 12–30 மணிக்குப்போக 12க்கே தயாராகி வீட்டுக்குப் போக வேண்டும்; மறுபடியும் 2மணிக்கு வந்து, 2–30 மணிக்கு வேலை துவக்கி, 4–30 மணிக்கும் போக 4–க்கே தயாராகி வெளியே போய்விட வேண்டும். மாணவர்களும் அந்தப்படி வந்து மாதம் ரூ. 7, 8, 10 என்று சம்பளம் கொடுத்துப் படிக்கவேண்டும். வாத்தியார் ஏதோ சொல்லித் தருவார் வருஷக் கடைசியில் பையன் பாஸானால் சரி; பெயிலாய் போனால் அதைப்பற்றி அக்கரையேயில்லை. அவன் படிக்கவில்லை; அவனுக்குப் புத்தி இல்லை, அதனால்தான்பெயிலாய்ப் போய்விட்டான் என்பதாகச் சொல்லிவிடுவார்கள். படிப்பதற்குத்தானே அய்யா அவன் இங்கு மாதம் ரூ. 7, 8, 10 சம்பளம் கட்டிக்கொண்டு வந்து விடப்படுகிறான்; புத்தி வருவதற்கு ஆகத்தானே அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது, அப்படி இருக்கும்போது படிக்கவில்லை, புத்தியில்லையென்று நீ சொன்னால் என்ன அர்த்தம்?–என்று கேட்டால், அதது அவனவனுக்கு அவ்வளவுதான் என்று போய் விடுவார்கள். இப்படிப் பொறுப்பு கொஞ்சங்கூட இல்லாதமாதிரியிலா வாத்தியார் வேலை இருப்பது? அவனே படித்து பாஸ் செய்வது என்றால், பாடப் புத்தகங்களைக் கொடுத்துவீட்டிலேயே உட்கார்ந்து படித்துக்கொள் என்று சொல்லிவிட்டால் தீர்ந்தது. இதற்கு நடுவில் நீ என்ன 'அய்யமார்?' அதற்கு ஆக சம்பளம் மற்றவைகள்! வருஷந் தோறும் இந்த S.S.L.C. மாணவர்கள் ரிசல்ட் வருகிறதே, இந்தப் பள்ளிக் கூடத்தில் இவ்வளவு % தான், இன்னொரு பள்ளிக் கூடத்தில் இவ்வளவு % மாணவர்கள் கோட் என்பதாக வெல்லாம் இதற்கு யார் பொறுப்பு? அவர்கள் படிக்கவில்லை ஆதலால் பாஸ்

---

(35–ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நீங்கலாக)—இதற்கான நிலையங்களின் எண்ணிக்கை 57 சதவிகிதமும், வருஷந்தோறும் பயிற்சி பெறுகிறவர்களின் எண்ணிக்கை 63 சதவிகிதமும் அதிகரிக்கும்.

செய்யவில்லை யென்று சொல்லி விட்டால் போதுமா? மாதா மாதம் சம்பளம் வாங்குவது மாத்திரமல்லாமல் Public Examination-ல் உட்காருவதற்கு ஆக என்று ஒவ்வொரு மாணவர்களிடத்திலும் 15 ரூபாய் கட்டணம் வாங்கப்படுகிறது. வருஷத்திற்கு 20, 30 ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்கு உட்காருகிறார்கள். அவ்வளவு மாணவர்களுக்கும் தலைக்கு 15 ரூபாய் என்றால் எவ்வளவு கணக்கு ஆகிறது. இப்படி உட்கார்ந்தால் அதில், பாதி மாணவர்கள்கூட, 50% மாணவர்கள்கூட தேறுவதில்லை, யென்றால் என்ன அர்த்தம்? செலவழிக்கப்படுகிற இந்த பெருத்த தொகைக்குத்தான் என்ன பலன்?

## அக்காலத்தில்

எனக்கு நன்றாகத் தெரியும், நானெல்லாம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்தில் பையனுக்குப் படிப்பு வரவில்லை யென்றால், பையனுக்கு ஏதாவது தெரியவில்லை யென்றால் பையனுடைய தாயார் போய் அந்த வாத்தியாரை மிரட்டுவார்கள். என்னுடைய வளர்ப்புத்தாயாரே, எனக்குப் படிப்புவரவில்லை என்பதற்காக எவ்வளவோ தடவை திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியாரை மிரட்டியிருக்கிறார்கள். எதற்குச் சொல்லுகிறேன், இன்றும் அந்தந்தப் பையன்களின் தாயார்களே மிரட்டவேண்டும் என்ற நோக்கத்தில் சொல்லவில்லை. அப்போது வாத்தியாருக்கு அவ்வளவு பொறுப்பு இருந்தது. பையனின் படிப்பு விஷயத்தில் அந்தக் காலத்தில் வாத்தியாருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் மாதா மாதமும் அவரிடம் படிக்கிற பிள்ளைகள் ஒவ்வொருவரும் 2 அணா அல்லது 4 அணா கொடுத்துவிட வேண்டும். இது அல்லாமல் வருஷத்திற்கு ஒருநாள் வாத்தியாருக்கு ஒவ்வொரு பிள்ளையும் எட்டு அணா அல்லது ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். சிலர் அதைத் தானியமாகக் கொடுப்பார்கள். இதை வாத்தியாரே ஒவ்வொரு வீடாக வந்து வாங்கிக்கொண்டு போவார்கள். இத்தனைக்கும் அந்தக் காலத்தில் லீவு விடுமுறை எவ்வளவு என்றால் மாதத்திற்கு 2 நாள்தான். அதாவது அமாவாசையிலும் அதற்கடுத்த நாளிலும் லீவு விடப்படும். பள்ளிக்கூடத்திற்கு அதிகாலை நேரத்திலேயே போய் விடவேண்டும். மாலை இருட்டினதற்கப்புறந்தான் படிப்பு முடிந்து பிள்ளைகளை வீட்டிற்கு அனுப்புவார்கள். பல தடவை இப்படிகாலங்காத்தாலே எழுந்து பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டியிருக்கிறதே என்று இரவு சாப்பிட்டவுடனேயே நான் வாத்தியார் வீட்டில் போய் படுத்துக்கொள்ளுவேன். காலையில் வாத்தியார் 'எப்படா வந்தாய்?' என்றால் 'உங்க அடிக்குப் பயந்து ராத்திரியே வந்து படுத்துக்கொண்டேன்' என்று சொல்லுவேன். இந்த மாதிரிதான்

அந்தக் காலத்தில் படிப்பு இருந்தது. பரீட்சை என்பதாகக் கிடையாது. மாணவர்கள் படித்துக்கொண்டே வரவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குப்பின் மாணவனுக்கும் படிப்பு போதும் என்கிற நிலைமை வந்தவுடன் வீட்டுக்கு, அனுப்பிவிடுவார்கள். இந்தப்படிதான் அப்போதெல்லாம் நடைபெற்று வந்தது. இதனால் என்ன கெட்டுப்போய் விட்டது? அல்லது இப்படி இருந்த முறையினால் என்ன ஒழுக்கம் குறைந்துவிட்டது? இன்னுஞ் சொல்லப்போனால் அந்தக் காலத்தில் இருந்த ஒழுக்கமும், நாணயமும் இந்தக் காலத்தில் இல்லை இந்தக் காலத்தில் தான் சர்வம் பித்தலாட்ட மயம் என்பதாக இருக்கிறது. அப்போதெல்லாம் பாண்டு, பத்திரம் எதுவுமே இல்லாமல் ஒருவரிடம் ஒருவர் பணம் கொடுத்துவைப்பார்கள். இந்த மாதிரி காரியங்களில் எந்தவிதமான பித்தலாட்டமும் நடக்காது. எங்கள் தந்தையார் அவர்களிடமே எத்தனை யோபேர் பணம் கொண்டு வந்து வைத்திருக்கச் சொல்லிக்கொடுப்பார்கள் குறிப்புச் சீட்டுக்கூட கேட்கமாட்டார்கள். ஒருவருக்கொருவர் அந்தக் காலத்தில்நல்ல நாணயமும், நம்பிக்கையும் இருந்து வந்தது. இப்போது போல காலணாவுக்குக்கூட ஒரு வரையும் நம்ப முடியாத நிலைமை போல அல்ல. இப்போது துரோகிகளுக்கும், நாணயக் குறைவானவர்களுக்கும் அதிக மரியாதை! பெருமை! ஏனென்றால் அப்படிப்பட்டவர்களே நாட்டில் பொது வாழ்வில் அதிகம்.

## இன்றைய படிப்பினால்

ஆகவே இன்றைய படிப்பினால் அறிவும் வளருவதில்லை; நாணய ஒழுக்கமும் வளருவதில்லை. இந்தப் படிப்பு புரட்டு பித்தலாட்டத்திற்கு ஆன படிப்புதான்; எதற்கும் உதவாத படிப்புதான். அதிகப்படியான செலவு; அதுவும் வீண் செலவு, மற்றும் பல தொல்லைகள். இவ்வளவு தொல்லையைத் தாண்டி வந்தாலும் நீ வீட்டுக்குப் போ என்று சொன்னால் என்ன அர்த்தம்? எனவேதான் இம்முறை ஒழிக்கப்படா விட்டால் பெருங் கிளர்ச்சி துவக்கப்படவேண்டும் என்று சொல்லுகிறேன்.

(பெரியார். ஈ. வே. ரா.)

# உங்களுக்குத் தெரியுமா ?

1. 1952-ம் ஹு முதல் ஆறு மாதங்களில் இந்தியா 25,719 தையல் மிஷின்கள் உற்பத்தி செய்திருக்கிறது; சென்ற வருஷத்தில் மொத்தம் 44,461 யந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன; 1946-ம் ஹுத்திலோ 6,121 யந்திரங்களே உற்பத்தியாயின.

2. இந்தியாவில் கொடிய நோய்கள் காரணமாக மாண்டு போன கால்நடைகளின் எண்ணிக்கை 1943-44-ம் ஹுத்தில் 2,79,800 ஆக இருந்தது. 1951-52-ம் ஹுத்தில் 95,081 ஆக குறைந்து போயிற்று.

3. இவ்வருஷம் சேகரம் செய்யப்பட்ட கோதுமையின் மொத்த அளவு 7,88,300 டன்னாகும்; இது லட்சிய அளவை விட ஒரு லட்சம் டன் அதிகமாகும்.

4. 1951-52-ம் ஹுத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 317 கோடியாகும்; இந்தத் தொகையானது மத்திய, ராஜ்ய சர்க்கார்களின் மொத்த ரெவின்யூ வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமாகும்.

5. இந்தியாவில் ஒரு வருஷத்தில் பெய்யும் மழையின் மொத்த அளவு சுமார் 275 கோடி ஏக்கர் கன அடியாகும்; இதில் சுமார் 135 கோடி ஏக்கர் கன அடி நதிகள் மூலமாகக் கடல்களில் போய்ச் சேர்ந்து விடுகிறது.

6. இந்திய ரயில்வேக்களில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களிடமிருந்து 1949-50-ம் ஹுத்தில், மொத்தம் சுமார் ரூ. 173 லட்சம் வசூலிக்கப்பட்டது; 1950-51-ம் ஹுத்தில் இந்தத் தொகை 171 லட்சம் ரூபாயாகக் குறைந்துபோயிற்று.

7. இந்திய ரயில்வேக்கள் சென்ற வருஷம் வாங்கிய மொத்தம் 81·59 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களில், சுமார் 63·22 கோடி ரூபாய் பெறுமான முள்ளவை இந்தியாவிலேயே செய்யப்பட்டவையாகும்.

8. 1951-52-ல், மத்திய ராஜ்ய சர்க்கார்களுக்குக் கிடைத்த மொத்த வருமானம் 910·78 கோடி ரூபாய்; மொத்தச் செலவு 824·6 கோடி ரூபாய்.

9. இந்தியாவிலேயே சென்னை ராஜ்யத்தில்தான், முட்டை உற்பத்தி மிக அதிகம்; இந்த ராஜ்யத்தில் ஆண்டுதோறும் மொத்தம் 25·5 கோடி முட்டைகள் உற்பத்தியாகின்றன; ஆனால், முட்டைகள் மிக அதிகமாக உபயோகப்படுவது திருவாங்கூர் கொச்சியில் தான்; வருஷமொன்றுக்கு நபரொருவருக்கு சராசரி 19 முட்டைகள் விதம் உபயோகப்படுகிறது; மிகக் குறைவாக உபயோகப்படுவது மத்தியப் பிரதேசத்தில்; வருஷமொன்றுக்கு நபரொரு

வருக்குச் சராசரி 5 முட்டைகள் வீதமே அங்கு செலவாகிறது.

10. இந்தியாவிலே பாசன வசதி கொண்ட பிரதேசம் மிக அதிகமாக இருப்பது உத்தரப் பிரதேசத்தில்; இங்கு 112 லக்ஷம் ஏக்ராக்கள் உள்ளன; மிகக் குறைவாக இருப்பது குடகு ராஜ்யத்தில்; இங்கு 6,000 ஏகராக்கள் உள்ளன.

11. 1950-51-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட விளை பொருள்களின் மொத்த பெறுமானத்தில் சுமார் 13 சதமானம் இந்தியத் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைத்ததாகும்; இதற்கு அடுத்தபடியாக சம்பாரச் சரக்குகளைக் கூறலாம். மொத்த ஏற்றுமதியில் இவை 4·07 சதவிகிதமாகும்.

12. 1952-ம் வருஷ முதல் ஆறு மாதங்களில், இந்தியாவில் மொத்தம் 75,919 சைக்கிள்கள் முழுசாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன; சென்ற வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்களின் மொத்த எண்ணிக்கை 1,14,275 ஆகும். 1946-ம் வருஷத்திலோ 42,983 சைக்கிள்களே உற்பத்தியாயின.

13. இந்தியாவில் வசூலிக்கப்படும் வருமான வரியில் பாதிக்கு மேற்பட்ட தொகை சூபர் வரி மூலம் கிடைப்பதாகும்; 1950-51-ம் வருஷத்தில் வருமான வரியாக வசூலிக்கப்பட்டது. 94·80 கோடி ரூபாய்; இதில் சூபர் வரியாக வசூலிக்கப்பட்ட தொகை 602·3 கோடி ரூபாய் ஆகும்.

14. இந்திய ரயில்வேக்களில், நாளொன்றுக்கு சராசரி 3,877 பிரயாண வண்டிகள் வீதம் ஓடுகின்றன; 3,129,430 பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

15. இந்தியாவிலே பால் மிகவும் அதிகமாக உபயோகிக்கப்படுவது கிழக்குப் பஞ்சாபில் தான்; இங்கு நபரொருவருக்கு நாளொன்றுக்கு 17 அவுன்ஸ் பால் செலவாகிறது; பால் மிகக் குறைவாக உபயோகப்படுவது அஸ்ஸாமில்; இங்கு நபரொருவருக்கு நாளொன்றுக்கு ஒரு அவுன்ஸுக்குச் சற்று அதிகமாகச் செலவாகிறது.

16. உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களின் கீழ், 1952-53-ம் வருஷத்தில் அதிகப்படியாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்ட லக்ஷிய அளவான, 13 லக்ஷம் டன் உணவுத் தானியங்களில், சுமார் 84 லட்சம் டன் சிறுபாசன வேலைகள் மூலம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

17. வீடுகளில் உபயோகிக்கப்படும் ரேடியோ செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 1951-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று, 635,026 ஆக இருந்தது; வர்த்தக உபயோக ரேடியோ லைசென்சுகளின் எண்ணிக்கை 27,217 ஆக இருந்தது.

**(சென்னைச் செய்தி)**

# வில்லியம் ஷேக்ஸ்பியர்

(ப. வா. இளஞ்சிற்பியன்)

கவிச் செல்வன் கீட்ஸை, மக்கள் கவிஞன் தாமஸ் கிரேயை, கொடுங்கோலாட்சிக்குத் தன் தலையைப் பரிசளித்த தாமஸ் மூரை, கண்ணால் கண்டதை காவியமாக்கிய வேர்ட்ஸ் வொர்த்தை, அறிவியல் அறிஞன் ஐசக் நியூட்டனை, அறிவின் தூதர் எச். ஜி. வெல்ஸை உலகுக்கு அளித்த இங்கிலாந்துதான் கவிஞர் ஷேக்ஸ்பியரையும் அளித்துள்ளது.

கி. பி. 1564-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், முதல் நாள் அன்று இங்கிலாந்தில் வார்விக் ஷையர் (Warwichshire) நகருக்கு அருகில், அவான் (Avon) நதிக்கரையின் மேல் எழுந்துள்ள ஸ்ட்ராட்ஃபோர்டு (Stratford) கிராமத்தில், ஒரு வீட்டில் உறவினர்களும், சுற்றத்தாரும், நண்பர்களும் குழுமியுள்ளனர். அடுத்த அறையில் எழுந்த குழந்தையின் குரலைக் கேட்டதும், அவர்கள் புன் முறுவல் கொள்ளுகின்றனர். அறையினின்றும் வெளிவரும் தாதியைப் பார்த்து, அங்கிருந்தோர் யாவரும் பரபரப்போடு, "பிறந்த குழந்தை ஆண்சிங்கமா? அல்லது பெண் அன்னமா?" என்று கேட்கிறார்கள். அந்தத் தாதி மகிழ்ச்சியுடன் 'ஆண்' என்றாள். இதைக் கேட்டதும் அங்கிருந்தோர் உள்ளமெல்லாம் உவகையிலாழ்கிறது! இவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணம், அந்த ஆண் குழந்தை. ஆம். அதுதான் அந்தக் குழந்தையேதான். கவிஞருலகின் இதய கீதமெனப் போற்றப்படும் வில்லியம் ஷேக்ஸ்பியர்.

தனக்குப் பிறந்தது, ஆண் குழந்தையெனக் கேட்டதும், அக் குழந்தையின் தந்தையான ஜான் ஷேக்ஸ்பியர் (John Shakespeare) உள்ளத்தில் பற்பல சிந்தனைக் கோடுகள் தோன்றி மறைந்தன! 'தனக்குப்பின் தன் கசாப்புக்கடையைத் திறமையுடன் நடத்த ஒரு மகன் பிறந்து விட்டானே' என்றெண்ணுகிறான். அக்குழந்தையின் தாயாரான மேரி ஆர்டன் (Mary Arden) "இதற்கு முன் பிறந்த குழந்தைகளையெல்லாம் மண்ணிற்கு அர்ப்பணித்துவிட்டோம். இதுவாவது நிலைத்து நின்று நம்மை மகிழ்விக்காதா?" என்றெண்ணுகிறாள்.

ஜான் எழுத்தறிவில்லாதவன்; என்றாலும் கசாப்புக் கடையைத் திறமையுடன் நடத்தி வந்தான். அவனிடம் செல்வமும் சிறிது இருந்தது. மேரி பணக்காரக் குடியானவன் ஒருவனின் மகள். அவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் அக்குழந்தைக்கு 'வில்லியம்' என்ற பெயர் சூட்டி அழைத்தனர். ஆனால், நாளடை

யில் ஷேக்ஸ்பியர் என்றே அவருடைய நண்பர்கள் அழைத்து வந்தனர்.

ஷேக்ஸ்பியர் சிறுவனாயிருந்த போது, ஸ்ட்ராட்ஃபோர்டில் பிளேக் என்னும் கொடிய தொத்து நோய் வந்து பலர் மடிந்தனர். ஷேக்ஸ்பியரையும் அது வந்து தொட்டுப் பார்த்து விடுமோ என்றஞ்சி, நோய் விரைந்து ஊரைவிட்டுப் போவதற்காக நோய் வந்தவர்களுக்குப் பணம் கொடுத்து உதவினார் ஜான்.

ஷேக்ஸ்பியர் இளமையில் அவ்வூரில் இருந்த இலக்கணப் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். அங்கே லத்தீனும், கிரேக்க மொழியும் பயின்றான். இங்கே அவர் கற்ற அடிப்படைக் கல்வி தான் அவருக்கு உலகம் வியக்கும்படியான காவியங்கள் எழுத உதவிற்று என்னலாம்.

இளமைக் காலத்தில் ஷேக்ஸ்பியர் கானாற்றின் கரையிலேயும் பூஞ்சோலைகளிலும் திரிந்து இயற்கையழகைக் கண்டு களிப்பாராம்.

சிறுவனாயிருந்த ஷேக்ஸ்பியர், வாலிபனாக மாறினான். வாழ்க்கைத் துறையில் இறங்கினான். 1582ஆம் ஆண்டு ஆனிஃகேதவே (Anne Hathaway) என்ற மங்கையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு இல்லறம் புரிந்தார். வருவாய் இல்லாத கணவரை, அவள் ஏளனம் செய்து கொண்டேயிருந்தாள். தந்தையின் தொழிலை யேற்க அவர் விரும்பவில்லை. மனைவியின் நச்சரிப்பையும், ஏளனத்தையும் சகியாமல், 1587-ஆம் ஆண்டு பஞ்சைக் கோலத்தோடு இலண்டன் மாநகரையடைந்தார். வேலையில்லாத் திண்டாட்டமும், பசிக் கொடுமையும் அவரை வாட்டின. என்ன செய்வதென்றறியாமல் திகைத்தார்.

அக்காலத்திலே, இலண்டனில் பெயர் பெற்றிருந்த நாடகக் கொட்டகை ஒன்றில், குதிரை லாயத்தில் ஷேக்ஸ்பியருக்கு வேலை கிடைத்தது. விஞ்ஞானத்தின் விளைவாகத் தோன்றிய கார் வசதிகள், அந்நாளில் கிடையாது. அதனால் சீமான்கள் குதிரையின் மீதே நாடகக் கொட்டகைக்கு வந்தனர். அவர்கள் கொண்டு வரும் குதிரைகளை வைத்துக் கண்காணித்துக் கொடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பு ஷேக்ஸ்பியருக்குக் கிடைத்தது. மனமுவந்து அப்பணியினைச் செய்தார்.

கடமையில் கருத்துள்ள ஷேக்ஸ்பியரின் மீது, முதலாளியின் அன்புப் பார்வை விழுந்தது. அதன் பயன்; நாடகத்தின் போது ஒரு காட்சிக்கும், மற்றொரு காட்சிக்கும் இடையில், அடுத்த காட்சிக்கு வேண்டிய சாமான்களை எடுத்துப்போடும் "செட்" உத்தியோகம் கிடைத்தது. பின்பு, நாடக உறுப்பினர்களுக்கு வேடமணியும் "மேக்கப்" பொறுப்பு தரப்பட்டது. அதனைத் திறம்படச் செய்யவே

பின்பு, நாடகத்திலே நடிக்க வாய்ப்பு கிடைத்தது. நடிக்கத் தொடங்கினார்.

நாடகத்தில் நடிக்கும்பொழுது தான், அவருக்கு நாடகம் எழுத வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. பிறருடைய கதையைத்தானே நாம் நடிக்கிறோம். நம் மனம் போல, நாமே கதை எழுதி ஏன் நடிக்கக் கூடாது? இந்த எண்ணம் அவருடைய உள்ளத்தில் உதயமான போது, எழுதுகோலை எடுத்தார், தீவிரமாக முனைந்து நாடகமொன்றை எழுதி முடித்தார். அதை நாடக முதலாளியிடம் கொடுத்து அரங்கேற்றும்படிக் கூறினார். "மேடையிலே வேடம் தாங்கி நடிக்கும் நீயுமா நாடகம் எழுத வந்து விட்டாய்?" என்று ஏளனத்தோடு கேட்டார் நாடக முதலாளி.

"கசாப்புக் கடைக்காரன் மகனா? அவனா நாடகமெழுதுகிறான்? அவன் நாடகமெழுதினால் இலக்கியம் அன்றே இறந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்!"

"கத்தியைப் பிடிக்கும் கை, பேனாவைப் பிடிப்பதா?"

"அவனுக்கும் எழுத்துலகிற்கும் என்ன சம்பந்தம்?"

"மேடையிலே நடிக்கிறவன், நாடகம் எழுதலாமா?"

இப்படியாகச் சீறியது அன்றைய இங்கிலாந்து, ஷேக்ஸ்பியர் நாடகம் எழுதியதைக் கண்டு! ஷேக்ஸ்பியர் நாடகமெழுதி நாடகசாலை முதலாளியிடம் அதைக் கொடுத்து, அரங்கேற்றும்படிச் சொன்னதற்காக அவருக்குக் கிடைத்த ஒரே பரிசு முதலாளியின் பரிகாசம்!

மக்கள் சுவைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நாடகம் எழுதிய ஷேக்ஸ்பியரை ஏளனம் செய்த அதே இங்கிலாந்து, இன்று அவரை அறிஞருலகின் இதயகீதம் எனப் போற்றுகிறது! முதலாளியின் ஏளனப்பார்வைக் கிடையேயும், மேட்டுக் குடியினரின் மிடுக்குப் பார்வைக்கிடையேயும் தன் துன்ப வாழ்க்கையை நடத்திய வில்லியம் ஷேக்ஸ்பியர். (William Shakespeare) சலியாத உழைப்பின் காரணமாக நாடகப் பேரறிஞர் ஆனார். நற்கலைஞர் ஆனார்.

எதிர்ப்பைக்கண்டு கலங்காமல், ஏளனத்தைப் பொருட்படுத்தாமல், இரவென்றும் பகலென்றும் பாராமல் எழுதினார் ஷேக்ஸ்பியர் மக்கள் தன்னுடைய நாடகங்களைக் கண்டு, சுவைத்து; தமது சீர்கேடான வாழ்வைத் திருத்திக் கொள்வார்களென்று முப்பத்தேழு நாடகங்கள் எழுதினார். புதுப்பாணியில், புரட்சிகரமாக இருந்தன அவரது நாடகங்கள்.

அவர் எழுதிய நாடகங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை; **இன்பியல்** (Comedy) **துன்பியல்** (Tragedy) **வரலாறு** (History) என்பனவாம்.

தகுதியில்லையென்று, தனது நாடகத்தை எந்த நாடக முதலாளியும் அரங்கேற்ற மறுக்கிறார்களே என்ற ஏக்கத்துடன், ஷேக்ஸ்பியர் 1616 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள்; 23–ம் நாள், ஸ்ட்ராட்ஃபோர்டில் தம்முடைய இல்லத்திலேயே உயிர் துறந்தார். தன்னுடைய 'நிரந்தர மாளிகை' யாகிய பார்ஷ் கல்லறையில் என்றென்றும் நீங்காத் தூக்கத்திலாழ்ந்து விட்டார் மேல்குடியால் புறக்கணிக்கப்பட்ட கவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர்!

அவர் இறந்த பிறகு, அவருடைய நாடகங்களை அலசி அலசிப் பார்த்தது அறிஞருலகம்! அவற்றிலே குற்றம் இல்லை, கலைத்தன்மை பொருந்தி யிருக்கிறது என்று அறிஞருலகம் தீர்மானித்தது. எந்த நாடக முதலாளி ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஏளனம் செய்தானோ, அவனே அவர் இறந்த பிறகு அவருடைய நாடகங்களை அரங்கேற்ற முன் வந்தான்.

இன்று அவரின் நினைவுக்காக ஸ்ட்ராட்ஃபோர்டில், அவான் நதிக்கரையிலே, ஒரு அழகிய நாடகக் கொட்டகை அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் எழுதிய நூல்களிற் சில:

வெனிஸ் வணிகன் (Merchant of Venice) லியர் மன்னன் (King Lear) நீ விரும்பியது போல! (As you Like it) ஜான் மன்னன் (Kingjohn) ஒதல்லோ (Othello) மாக் பெத் (Macbeth) ஹாம்லெட் (Hamlet) ஜுலியஸ் ஸீஸர் (Julius Caesar) பன்னிரண்டாம் இரவு (Twelth Night) அந்தோனியும் கிளியோ பாட்ராவும் (Antony And Cleopatra) ரோமியோவும் ஜுலியட்டும் (Romeo And Juliut).

கலைத்துறையிலே மடமை, அறிவுலகத்திலே காரிருள்; ஷேக்ஸ்பியரின் கருத்துக்களாகிய அறிவொளியினால் அம்மடமையை—இருளை நீக்கலாம் என்று அறிஞருலகம் கூறுகிறது. உலக நாடக அரங்குகளெங்கும் ஷேக்ஸ்பியர் பிரதிபலிக்கத் தொடங்கி விட்டார்.

வாழ்க அவர் புகழ்!

(பகுத்தறிவு)

# யார் பாவி?

CONNEMARA ... LIBRARY
29 MAY 1955
MADRAS

எஸ். என். விஜயலக்ஷ்மி

பாலஸ்தீனத்தில் ஒரு கிராமம். காலம் நடுப்பகல். கிராமத்துத் தலைவர்கள் எல்லாம் கிராம சபையில் கூடியிருக்கின்றனர். காலையில் கூடியவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். விவாதம் இன்னும் முடியவில்லை. பேச்சு மும்முரமாக முற்றிக் கொண்டே போகிறது. அதோ! என்ன ஒரு அமைதி காண்கிறதே அவ்விடத்தில் முடிவிற்கு வந்து விட்டார்கள் போலிருக்கிறது. என்ன முடிவு?

அந்த ஊரிலே ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி வசித்து வந்தாள். அவள் கணவன் சமீபத்தில் இறந்துவிட்டான். திக்கற்ற அவள் வேறு வழியின்றி ஒரு ஆடவனை நாடி அவனுடன் வசிக்கத் தொடங்கினாள். அது எப்படிப் பொருந்தும் என்று மூண்டு எழுந்தனர் கிராமத்துப் பெரியோர்கள். பஞ்சாயத்துச் சபை விவாதித்தது. ஏழைதானே; அதுவும் திக்கற்றவளாயிற்றே; ஆகையினால் அவளைத் தூற்றுவதும சுலபம். அவளுக்கு என்ன தண்டனை விதித்தாலும் யார் கேட்கப் போகிறார்கள். ஏழைக்கு ஏது நியாயம்? திக்கற்றவர்களுக்கு ஏது துணை? பெண்ணுக்கு ஏது பச்சாத்தாபம்?

பெரியோர்கள் கருணையில் அல்ல; பணத்தில், பதவியில், பாபத்தில் மூழ்கியவர்கள். இவள் விஷயத்தை அலசி ஆராய்ந்தார்கள். என்ன செய்வது? சரி இவளைக் கல்லாலடித்துச் சாகடிப்பது தான் சரியான தண்டனை என்ற முடிவுக்கு வந்தனர் அக்குரூர உள்ளத்தினர்.

ஏசு கிறிஸ்துவுக்கு இக்கொடூர முடிவு தெரிய வந்தது. வேதனையில் ஆழ்ந்தார் அவ்வண்ணல். என்ன பரிதாபம். திக்கற்ற பெண் ஒருத்தி ஒருவனை நாடிப் பிழைக்கவும், எஞ்சிய காலத்தைப் போக்கவும் நிச்சயித்தது பாபம் ஒன்றுமில்லையே. இக்கொடூர சிந்தையுடைய ஆண்கள் மட்டும் பாபம் செய்யவில்லையா? என்றெல்லாம் நினைத்து மனம் நொந்தார். எப்படியாகிலும் கல்லாலடிக்கும் இடத்திற்குச் சென்று தன்னாலானதைக் காண அவாக் கொண்டார். அங்கும் சென்றார்.

உயர்ந்த மேடையின்மீது அந்தப் பெண் — இருபத்தைந்தும் நிரம்பாத இளம் பெண், நியாயமாக, கண்ணியமாக வாழவேண்டிய விருப்பமுடையாள், நின்றிருந்தாள். அவளைச்சுற்றி நூற்றுக் கணக்கில் கூடியிருந்தனர் பேய்கள். அவளை எள்ளி நகைத்தும், அவளை தூற்றியும், காறி

உமிழ்ந்தும் நின்றிருந்தனர் அப் பேய்கள். கற்கள் குவியலாக ஓரிடத்தில் இருந்தன. இன்னும் பஞ்சாயத்துத் தலைவர் வரவில்லை. அவர் வந்தவுடன் ஆக்ஞை அளிப்பார். அளித்ததும் காரியம் நடைபெறும்.

தெய்வாதீனமாகவோ, அல்லது நியாயம், தர்மம் உலகினில் லாமலும் இல்லை என்று நிரூபிக்கவோ தெரியவில்லை. ஏசு கிறிஸ்துவால், பஞ்சாயத்துத் தலைவர் வருமுன்னே அங்கே வரமுடிந்தது. அவர் வருகையை அங்கே கூடின சிலர் வெறுத்தனர். இந்தப் "பாவி மனுஷன் ஏன் இங்கு வருகிறான்?" என்று மக்களிடை ஒரு பயம். என்ன நேருமோ என்று ஒரு சிலர் ஒரு பக்கம் ஒதுங்கினர்.

ஏசு கிறிஸ்து, கருணை வள்ளல் அந்த மேடை மீது ஏறினார்: பரிதாபமாக அலறி நிற்கும் அபலைக்கு அபயமளித்தார். அன்பு நோக்கால் அவளுக்கு உணர்வு தந்தார். உள்ளத்தினூடே ஒரு பேரின்பம் பேருவியாக ஓடச் செய்தார். திரும்பிப் பார்த்தார். கொடுமையே உருவெடுத்த அரக்கர்கள் நின்றனர். அவர்களைத் தன் அன்பு நோக்கால் பார்த்தார்.

அந்த அன்பு நோக்கில் ஒரு தீக்ஷண்யம் இருந்ததைப் பார்த்தனர் அந்த ஆன்மாக்கள். அதற்குள் பஞ்சாயத்துத் தலைவரும் அங்கே வந்துவிட்டார். ஏசு கிறிஸ்து பேசத் தொடங்கினார்.

"சகோதரர்களே! இங்கு நடக்கப் போகும் விஷயம் யாவற்றையும் அறிந்துணர்ந்தேன், இந்த முடிவிற்குப் பஞ்சாயத்து வந்ததென்றால் மிகவும் சரி, நானும் ஒப்புக் கொள்கிறேன்......"

எல்லோரும் "சபாஷ் சபாஷ்" என்று கரகோஷம் கிளப்பினர்.

"ஆனால் ஒன்றுமட்டும் உங்களை மன்றாடிக் கேட்கிறேன். அந்த நிபந்தனையின் பேரில்தான் நீங்கள் இக்காரியத்தில் ஈடுபட வேண்டும்" என்று ஏசுநாதர் கூறினார்.

கூடியிருந்தோர் அனைவரும் ஒருவரையொருவர் விழித்துப் பார்த்துவிட்டுச் 'சரி" என்றனர்.

ஏசு நாதர் தொடர்ந்து கூறினார். "அப்படியானால், உங்களில், பிறந்தது முதல் ஒரு பாப காரியமும் செய்யவில்லை என்று நிச்சயமாக யார் கருதுகிறீர்களோ அவர்கள் தான் இப்பெண்மீது முதல் கல் எடுத்து எறிய வேண்டுமென்றார்."

கூட்டத்தில் ஒரு சிறிய குழப்பம்—யாருக்குத் தைரியம் வரும். பஞ்சாயத்துத் தலைவரே முதலில் நழுவிவிட்டார். கூட்டமும் கலைந்தது. பெண் மணியும் விடுதலையடைந்தாள்.

# தஞ்சை மாவட்டத்தில் புயலால் ஏற்பட்ட சேதங்கள்

## சென்னை முதலமைச்சர் அறிவிப்பு

தஞ்சாவூர் கலெக்டரிடமிருந்து தஞ்சை ஜில்லாவில் மட்டும் ஏற்பட்ட சேத மதிப்பு ரூ. 5 கோடி இருக்கலாமென அறிக்கை வந்திருப்பதாக முதலமைச்சர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்டவர் எண்ணிக்கை 350; கால் நடைகள் சேதம் 26,053; அழிவுற்ற வீடுகள் 162418; சேத முற்ற வீடுகள் 35,230 என கலெக்டர் அறிவித்துள்ளார்.

சேதமுற்ற பாதைகள், ஏரிக்கரைகள், உடைப்பு முதலியவற்றில் பலவற்றை கிராமவாசிகளே கவனித்துச் சீர்படுத்தி வருகின்றனர்.

கொடிக்கால் பயிர்கள் அறவே அழிவானது. 2532 ஏக்கர். 12692 ஏக்கர் நிலங்களில் இருந்த வாழைத் தோட்டங்களும் 419 ஏக்கர் கரும்புச் சாகுபடியும் முற்றிலும் சேதமுற்றன.

அறுவடைக்குத் தயாராயிருந்த 36000 ஏக்கர் நிலத்தில் நெல் விளைச்சல் நாசமாகிவிட்டது.

இன்னும் தென்னை, மா, புளி முதலிய மரங்களின் சேதம் கணக்கில் அடங்காதவையாகும். தஞ்சை கலெக்டரின் நிவாரண வேலை முயற்சி போற்றத்தக்கதாகும். ரெவினியூ அதிகாரிகளால் தனிப்பட்டோர் உதவி கொண்டு 23000 பேருக்குமேல் உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

11000 குடும்பங்களுக்கு தங்குமிட வசதிகள் சர்க்கார் மரங்களிலிருந்தும் தனிப்பட்டவர்கள் உதவி கொண்டும் செய்து தரப்படுகிறது.

ஆங்காங்கு 45 நிவாரணக் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிற்சில இடங்களில் காலரா தடுப்பு சேவைகளும் நடைபெறுகின்றன.

சுமார் 60 குவியல் உப்பு வெள்ளத்தில் சென்று விட்டது.

கலெக்டர் சுய யோசனை முயற்சியால் நிலைமையைச் சமாளித்து வருகிறார்.

# பொன் மொழிகள்

செல்வாக்கு நீடித்து நிற்க வேண்டுமானால், செல்வத்தைப் போல அதையும் சிக்கனமாகவே செலவழிக்க வேண்டும்.

—டால்ஸ்டாய்.

குடியரசு என்பது; இயற்கை மனிதனுக்களித்துள்ள உரிமையை, மனிதன் பறித்துக் கொள்ளாமலிருப்பது தான்.

—தாமஸ் கார்லைல்.

காதல் என்பது மகளிர், ஆடவர் என்கிற இரண்டிடங்களில் ஒத்திருப்பின் மட்டுமே இன்பம் பயப்பதாகும்.

— திருவள்ளுவர்.

உள்ளத் தூய்மையுள்ளவனே நன்னெறியில் ஓடுகின்ற உணர்ச்சிகளுக்கு உருக்கொடுக்க முடியும்.

— நியூமன்.

நீதியும், உரிமையும் நெருங்கியிருக்க வேண்டும். இரண்டுக்குமிடையே பிரிவினை ஏற்படின், ஒன்றும் வாழாது.

— எட்மண்ட் பர்க்.

இரகசியமாகப் பேச விரும்புவது பயத்தையே குறிக்கும்.

— காந்தியார்.

வைதிகம் என்னும் நோயை, பகுத்தறிவு என்ற ஒரே மருந்தால் தான் போக்க முடியும்.

— அண்ணாத்துரை.

பணிவில்லாத மகள், நாளை பணிவில்லாத மனைவியாகமாறி விடுவாள்.

— பெஞ்சமின் ஃபிராங்களின்.

பொறுமை என்பது, ஒரு கசப்பான காய்; ஆனால், அது கனிந்தால் மிக இனிப்பானதோர் பழமாகும்.

— ரூஃசோ.

அன்பும் அறிவும் கைகோர்த்து இன்பத் தாண்டவம் ஆடும் போதுதான் நாகரிகம் நிலைக்க முடியும்.

— பெர்ட்ராண்ட்ரஃசல்.

பொதுவுடைமைக் கொள்கையை ஒழிக்க நடத்தும் யுத்தமே அதைப் பரவச் செய்யக்கூடும்.

—சர். இராதாகிருஷ்ணன்.

கணவன் சம்பாதிக்க வேண்டும்; மனைவி சேமிக்க வேண்டும்.

— மார்ட்டின்லூதர்.

எதிர்காலம் எவ்வாறிருக்குமென நமக்குத் தெரியாது. ஆனால் நம் நோக்கங்களே எதிர்காலத்தை உருப்படுத்தப் போகின்றன.

— ஜவகர்லால் நேரு.

அன்புடையவனே வாழ்கிறான்; சுயநலமுள்ளவன் செத்துக் கொண்டிருக்கிறான்.

— விவேகானந்தர்.

(பகுத்தறிவு)

Edited, Printed and Published, by P. Veeraraghavan, at Venkatesan Press, 94/95 New St. Mannady, Madras—1.